Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்..

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 மாசி 23 சனிக்கிழமை (07.03.2015) | பக்கங்கள் 20 | ஓசை – 158

## சீனாவின் முதலீடுகளை புறக்கணிக்கக்கூடாது



(பீஜிங்)

இலங்கையில் சீனா மேற்கொண்டிருக்கும் முதலீடுகளை இலங்கை அரசு புறக்கணிக்கக்கூடாது சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்புத் துறைமுக நகரத் திட்ட விவகாரத்தை இலங்கை அரசு பொருத்தமான முறையில் கையாளும் என்று சீனா எதிர்பார்க்கிறது. இந்தத் திட்டத்தை இடைநிறுத்த இலங்கை அரசு எடுத்துள்ள முடிவு குறித்து சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹுவா சுன்யிங், பீஜிங்கில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய முதலீடுகளை வரவேற்கிறது அரசு

(கொழும்பு)

இந்தியாவுடன் நெருக்கமான பொருளாதார உறவுகளை பேணும் வகையில் இலங்கையில் இந்திய நிறுவனங்கள் பாரிய முதலீட்டு முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென இலங்கை அரசினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், ஹிந்து பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்தின்போது இது தொடர்பில்

19 ஆம் பக்கம் பார்க்க



## உயர்தரப் பரீட்சை விண்ணப்பிக்க கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

கல்விப்பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்புங்கள் கோரும் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதி வரையில் விண்ணப்பிக்க முடியும் என இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 6

19 ஆம் பக்கம் பார்க்க

# இனவாதம் பரப்பும் பத்திரிகைகள்

## ரங்கா கலன்சூரிய சாடல்

(கொழும்பு)

வியாபார ரீதியாக இலாபமீட்டுவதற்காகவும், குறுகிய அரசியல் ஆதாயங்களை ஈட்டுவதற்காகவும் சில சிங்கள மற்றும் தமிழ் பத்திரிகைகள் வேண்டுமென்றே இனவாதத்தை தூண்டி வருவதாக சிரேஷ்ட ஊடக வல்லுநரும், இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் முன்னாள் தலைவருமான கலாநிதி ரங்கா கலன்சூரிய குற்றஞ்சாட்டியுள்ளார்.

வியாபார ரீதியான இலாபத்தை விடவும் குறிப்பாக குறுகிய அரசியல் ஆதாயங்களை ஈட்டுவதற்காகவே பிரதானமாக இந்தப் பத்திரிகைகள் இவ்வாறு செயற்பட்டு வருவதாகவும், கொழும்பு ஆங்கில நாளிதழான டெய்லி மிறர் பத்திரிகையில் எழுதிய ஆக்கமொன்றில் அவர் குறிப்பிட்டுள்ளார்.



இனவாதத்தைக் கக்கும் ஊடகங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தோரணையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் தெரிவித்திருந்த கருத்துத் தொடர்பாக தனது கட்டுரையில் ஆராய்ந்துள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

## கோத்தாவிடம் மன்னிப்பு கோரியது "சண்டே லீடர்"

(கொழும்பு)

இலங்கையின் பிரபல ஊடகமான சண்டே லீடர் நிறுவனம் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவிடம் நீதிமன்றத்தில் வைத்து நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரியுள்ளது.

மிக் விமானக் கொள்வனவு (Mig Aircraft Purchases) தொடர்பில் வெளியிட்ட செய்தி தொடர்பிலேயே இவ்வாறு மன்னிப்பு கோரப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர்

19 ஆம் பக்கம் பார்க்க

## கர்ப்பிணிப் பெண் உயிரிழப்பு

(கரவெட்டி)

எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த கர்ப்பிணிப் பெண் நேற்று மாலை உயிரிழந்து விட்டதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

வதிரியைச் சேர்ந்த பிரதீபன் சரண்யா (வயது - 24) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 2 ஆம் திகதி அதிகாலை அல்வாய் முத்துமாரியம்மன் பகுதியிலுள்ள வீட்டில் இவர் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் மீட்கப்பட்டு

19 ஆம் பக்கம் பார்க்க

## இரு நாட்கள் மட்டுமே மோடி இலங்கையில்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இரு நாட்கள் மட்டுமே இலங்கையில் தங்கியிருப்பார். ஏற்கனவே திட்டமிட்டபடி மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் என்ற நிகழ்ச்சிநிரலில் இப்போது திடீர் மாற்றத்தை புதுடில்லி செய்துள்ளது. இலங்கையில் மோடி செலவிடும் நேரத்தில் குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியப் பிரதமர் நரேந்திர

19 ஆம் பக்கம் பார்க்க

## எமது உறவுகளை மீட்டுத்தாருங்கள்

### கிளிநொச்சியில் உண்ணாநோன்பு




(கிளிநொச்சி)

கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக நேற்று உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உறவுகள் காணாமற்போனமை தொடர்பில் காணாமற்போனோர் அமைப்பினால் இவ் உண்ணாவிரதப் போராட்டம் .நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

காலை 9.00 மணிமுதல் பி.ப. 3.00 மணிவரை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த

19 ஆம் பக்கம் பார்க்க

காணாமற் போனவர்கள் எங்கே?

## இரகசிய தடுப்பு முகாம்கள் விவகாரம் நாடாளுமன்றுக்கு

### பிரதமரிடம் கேள்வி எழுப்புவார் டக்ளஸ்

காணாமற் போனவர்கள் இரகசிய முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளார்களா என்பதை பிரதமர் ரணில் விக்ரமசிங்க காணாமற் போனவர்களின் உறவுகளுக்கு தெளிவுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கையொன்றை எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வின் போது முன்வைக்கவுள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவர் விடுததுள்ள ஊடகங்களுக்கான அறிக்கையில் காணாமற் போனதாகக் கூறப்படும் தமிழ் இளைஞர், யுவதிகள் இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என நம்புவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் முன்னாள் நீதிபதியும், வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும் கூறியுள்ள கருத்தானது தமிழ் மக்கள் மத்தியில் பாரிய சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

இவ்விடயத்தில் உண்மையை காணாமற் போனவர்களின் உறவுகளுக்கு தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. ஆகவே, இரகசிய முகாம்கள் இலங்கையில் உள்ளனவா? அவை எங்கேயுள்ளன? அங்கு எத்தனை பேர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்? என்பதை தெளிவுபடுத்த வேண்டியது அரசின் கடமையாகும் என்ற கேள்வியை காணாமற் போனவர்களின் உறவுகள் சார்பாக எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வின் போது பிரதமரிடம் முன்வைக்க இருப்பதாக செயலாளர் நாயகம்

19 ஆம் பக்கம் பார்க்க

# கோப்பாய் கல்விக் கோட்டத்தில் பெருமளவில் ஆசிரிய பற்றாக்குறை

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் உள்ள கோப்பாய் கல்விக் கோட்டத்தில் பெரும் ஆசிரிய பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அதிபர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளரிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

நேற்று கோட்டப் பாடசாலைகள் சிலவற்றிற்கு பொதுச் செயலாளர் விஜயம் செய்த போது நேரடியாக அதிபர்கள் இந்தப் புகாரை முன்வைத்துள்ளனர்.

அச்சுவேலி புனிததெரேசா மகளிர் கல்லூரியில் பதினேழு ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணுவித்தியாலயத்தில் ஏழு ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும், புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலையிலும் பற்றாக்குறை உள்ளது. இதனை நேரில் சென்ற பொதுச் செயலாளர் அவதானித்தும் உள்ளார்.

அவ்வாறே கோப்பாய் கோட்டத்தில் உள்ள பிற பாடசாலை சாலைகளிலும் ஆசிரிய பற்றாக்குறை உள்ளதாக அதிபர்கள் பொதுச் செயலாளரிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக உடனடியாக வலயக் கல்விப் பணிப்பாளரைச் சந்தித்த பொதுச் செயலாளர், பிள்ளைகளின் கல்வி பாதிப்படையாமல் இருப்பதற்கும், நகர்ப்புறம் நோக்கி மாணவர்கள் நகர்வதைத் தடுப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார். அதனை ஏற்றுக் கொண்ட பணிப்பாளர். அடுத்த வாரம் குறைபாடுகள் ஓரளவுக்கு நீக்கப்படும் என உறுதியளித்துள்ளார்.

## சமூக செயற்பாட்டு மையத்தின் மகளிர்தின நிகழ்வு யாழில்

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வு நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது. பெண்கள் சாதனையை போற்றிடுவோம் எனும் தொனிப் பொருளில் காலை 9 மணிக்கு இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதில் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளதுடன் யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் தலைவி மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் பவானி ஞானச்சந்திரமூர்த்தி சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (இ)

## அனுமதிப் பத்திரமின்றி மாடுகளை இறைச்சிக்கு கடத்தியோர் கைது

(யாழ்ப்பாணம்)

அனுமதிப் பத்திரம் இன்றி இறைச்சிக்காக மாடுகளை கடத்திச் சென்ற இருவர் நேற்று யாழ். பொலிஸாரிடம் வசமாக மாட்டியதுடன் ஆறு மாடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று கொடிகாமம் பகுதியிலிருந்து வடிரக வாகனத்தில் இந்த ஆறு மாடுகளும் யாழ். நகரை நோக்கி கடத்திச் சென்ற போது பிரதான வீதி சுப்பிரமணியம் பூங்காவருகில் வைத்து இந்த வாகனம் சோதனையிடப் பட்டது. இதில் ஆறு மாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டதுடன் இவற்றை இறைச்சிக்காக அனுமதிப்பத்திரம் இன்றி கடத்திய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மடம் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவரே இவ்வாறு பொலிஸாரிடம் அகப்பட்டுள்ளனர். (இ)

## வீதியால் குறுக்கே ஓடிய சிறுவனை மோதித்தள்ளியது மோ. சைக்கிள்

வீதியில் குறுக்காக சென்ற சிறுவனை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் சிறுவன் படுகாமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பவத்தில் யாழ். மத்திய கல்லூரியில் தரம் 1இல் கல்வி கற்கும் முத்தமிழ் வீதி கொட்டடியைச் சேர்ந்த சுதர்சன் அஷ்வின் (வயது - 06) என்ற சிறுவனே படுகாயமடைந்துள்ளார்.

இவர் ஒழுங்கையில் உள்ள ஒரு வீட்டில் இருந்து தனது வீட்டுக்கு வீதியைக் கடந்துள்ளார். இவ்வேளை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் பிரஸ்தாப சிறுவனை மோதியுள்ளதாக சிறுவனின் பெறறோர் தெரிவித்துள்ளனர். (இ)

## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

காரைநகரில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

பொன்னம்பலம் வீதி காரை நகரைச் சேர்ந்த தங்கரத்தினம் வேணுகாந் (வயது - 43) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார்.

சிறுநீரக நோயினால் நீண்ட காலம் பாதிப்படைந்த பிரஸ்தாப குடும்பஸ்தர் தமது வீட்டினுள் நேற்று முன்தினம் இரவு தூக்கில் தொங்கியிருக்கலாம் எனவும் மனவிரக்தியில் காணப்பட்ட இவர் நோயின் தாக்கத்தில் இவ்வாறு தற்கொலை செய்திருக்கலாம் என பிரஸ்தாப குடும்பஸ்தவரின் உறவினர்கள் பொலிஸ் விசாரணையின்போது தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட சடலம் நேற்றுக் காலை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (இ)

## மாணவர்கள் இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம் - கொக்குவில் இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்கள் மூவர் பாடசாலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் கல்லூரியின் சொத்துக்களை சேதமாக்கியது கல்லூரியின் ஒழுக்க கட்டுப்பாடுகளுக்கு உட்படாமை மற்றும ஆசிரியர்களுக்கு அடிபணியாமை அச்சுறுத்தலாக இருந்தமை போன்ற காரணங்களை முன் வைத்து இந்த நடவடிக்கையை கல்லூரி நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

பல தடவைகள் இந்த மாணவர்களின் நடத்தை சம்பந்தமாக உரிய மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் தெரிவிக்கப்பட்ட நிலையிலும் மாற்றம் எதுவும் ஏற்படாத நிலையில் கல்லூரியின் நன்மை கருதி கல்லூரி ஒழுக்காற்றுக் குழுவின் நடவடிக்கைக்கு ஏற்ப இந்த முடிவு மேற் கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## நிதி ஒதுக்கீடு

வேலணைப் பிரதேச சபையின் 41ஆவது மாதாந்தக் கூட்டம் அண்மையில் வேலணைப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற நிலையில் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

சபைத் தவிசாளர் சி. சிவராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பிரதேச சபையிலிருந்து வேலணை மேற்கு அம்மன் வீதி, வேலணை கேணிக்கரை வீதி, புங்குடுதீவு - கல்லடி அம்மன் வீதி, அல்லைப்பிட்டி சிறிய வீதி, சாட்டி அந்தரட்டி வீதி, வேலணை நவக்க வீதி பாலம் திருத்தம் ஆகிய வீதிகளின் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இவ்வீதிகள் துரிதகதியில் புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக சபைத் தவிசாளர் தெரிவித்தார்.

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | சனிக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00 | MORNING SONG |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | ஆரோகனம் |
| Am 09.30 | MY STYLE |
| Am 09.55 | காலைச்செய்தி |
| Am 10.00 | ஆரோக்கியமான வாழ்வு |
| Am 11.00 | மக்கள் முகம் |
| PM 11.30 | I T .COM |
| PM 12.00 | காதல் கீதங்கள் |
| PM 12.30 | சிரிக்க சிரிக்க |
| PM 01.00 | மதிய செய்தி |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்தி |
| PM 04.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00 | அதிர்வுகள் |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தெரிந்தல் சொல்லுங்கள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | இதய ஊஞ்சல் |
| PM 09.00 | ஆங்கில திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |


ST.JOHN'S COLLEGE, JAFFNA
CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA
THE JAFFNA ACADEMY AND SCHOOL OF TECHNOLOGY

ADMISSION - ST. JOHN'S COLLEGE : 2016 FOR GRADE 1 GRADE 6 GRADE 10 & A/L CHUNDIKULI GIRLS' COLLEGE : 2016 FOR GRADE 1, GRADE 4, GRADE 6 & GRADE 12

01) அ. விண்ணப்பப் படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 02-03-2015 முதல் 16-03-2015 வரை பெற்றுக் கொள்ளலாம்.
ஆ. எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
இ. விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 21-03-2015 சனிக்கிழமை. அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.

02) தரம் 01 இற்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்படவேண்டும்.

03) விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

04) ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000/=

05) வயதெல்லைகள்:
அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2010இற்கும் 31-01.2011இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
ஆ. தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2007 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
இ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2005இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
ஈ. தரம் 10 விண்ணப்பதாரி 01.02.2001இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

06) தரம் 12 (A/L - 2018 Batch) விண்ணப்பதாரி 01.02.1999இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.

07) தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான பிரவேசப் பரீட்சை 17-10-2015 சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பமாகும்.

**குறிப்பு:**

01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப் பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.
02. தரம் 12 இற்கு (A/L- 2018 Batch) தமிழ் மொழி மூலம் (தொழில் நுட்பத்துறை, விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்), ஆங்கில மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) London A/l 2016/2017 இற்கும் கற்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் சென். ஜோண்ஸ் கல்லூரியினால் ஏற்றுக்கொள்ளப் படும். அனுமதிப் பரீட்சை 02-01-2016 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் 06-01-2016ஆரம்பமாகும்.
03) சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 (A/L) தமிழ் / ஆங்கில மொழி மூலம் 2018 Batch) விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.
04. The Jaffna Academy and School of Technology இல் Gr.5, மற்றும் 2ஆம் தடவையாக O/L, A/L எடுக்கும் மாணவர்களினதும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(C/3831)

**அதிபர்கள்**

# வீட்டுத்திட்ட அதிகாரிகளின் செயற்பாடு பாரபட்சம் காட்டுவதாக மக்கள் விசனம்

(பளை)

மன்னார் வெள்ளாங்குளம் பகுதியில் வீட்டுத்திட்ட தொழில் நுட்ப அதிகாரிகளால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மன்னார் வெள்ளாங்குளம் பகுதியிலுள்ள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டத்துக்கான கொடுப்பனவு பற்றுச்சீட்டுத் தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுவதாகவும் இதனால் தமது வீட்டின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதில் இடையூறுகள் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக வீடு கட்டுமானப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு தொழில் நுட்ப அதிகாரிகள் கூறும் வர்த்தக நிலையங்களிலேயே பெறவேண்டும் அப்படிப் பெற்றுக் கொள்ளாது வேறு வர்த்தக நிலையங்களில் பொருட்களைப் பெற்றுக் கொண்டால் பொருட்களுக்கான கட்டணப் பற்றுச் சீட்டை தாமதப்படுத்தியே செலுத்தி வருவதாகவும் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர்.

மேலும் தாம் குறிப்பிடும் வர்த்தக நிலையங்களில் பொருட்கள் கொள்வனவு செய்தால் மறுநாள் தொழில்நுட்ப அதிகாரிகள் பொருட்களுக்கான கட்டணப்பற்றுச் சீட்டை வழங்கி வருகின்றனர்.

அதுமட்டுமன்றி வேறு இடங்களில் கொள்வனவு செய்யும் பொருட்கள் தரம் குறைவானது, கட்டுமானத்துக்கு ஏற்ற தல்ல எனவும் அதனைத் திருப்பி செலுத்துமாறு மக்களை வற்புறுத்தி வருவதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து மக்களுக்கு ஏற்ற தீர்வினை வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (37)

# பேராயர் ஜெபநேசனின் மணிவிழா



(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயரும் யாழ்.பல்கலைக் கழக தமிழ் முது மாணிக் கற்கை நெறி வருகை விரிவுரையாளருமாகிய அதி வண.கலாநிதி எஸ். ஜெபநேசனின் மணிவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். சென்.ஜோண்ஸ் கல்லூரி பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த அருட்தந்தையும் விழாநாயகரின் சகோதரருமாகிய வண.எஸ்.மனோபவன் தலைமையில் நடைபெறும் வழிபாட்டு நிகழ்வுகளில் மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வண. இராயப்பு யோசப் ஆண்டகை அருளுரை வழங்குவார். உடுவில் மகளிர் கல்லூரியினரின் வழிபாட்டுப் பாடல்கள் இடம் பெறும்.

தொடர்ந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் துணை அதிபர் ச.லலீசனின் முன்னிலைப்படுத்தலில் பகிரங்கக் கூட்டம் இடம்பெறும். இந்நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் இலங்கைத் திருச்சபையின் நுவரெலியா மறை மாவட்டக் குருமுதல்வர் வண.எஸ்.பி.நேசகுமாரும் வழங்குவர்.

பவளவிழாவையொட்டி பேராயரால் எழுதப்பட்ட கண்டதும் கேட்டதும் என்ற நூலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வெளியிட்டு வைப்பார். பேராயரின் அபிமானிகளையும் மாணவர்களையும் இவ்விழாவில் கலந்து கொள்ளுமாறு விழா ஏற்பாட்டுக் குழுவினர் கோரியுள்ளனர்.



நயினாதீவு தம்பகைப்பதி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்திரப் பெருமான் ஆலயத்தில் நடைபெற்றுவரும் வருடாந்த திருவிழாவின் 6 ஆம் நாள் திருவிழாவில் நயினாதீவு முன்பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டியும் கலைநிகழ்வுகளும் நடைபெற்று அதில் வெற்றிபெற்ற மாணவர்களுடன் ஆலயத் தலைவர் நிற்பதைக் காணலாம். (21)

# கரைச்சி பிரதேச செயலகத்தின் பண்பாட்டுப் பெருவிழா

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் பண்பாட்டு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொள்ள உள்ளார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி பொறியியல் பீட பீடாதிபதி கலாநிதி அ.அற்புதராஜா, விவசாய பீடாதிபதி திருமதி சிவமதி சிவச்சந்திரன்,கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் ப.ஜெயராஜா,கலாநிதி ஆறு திருமுருகன்,கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் உதவி மாவட்ட செயலாளர் ச.கிருஸ்ணேந்திரன், கிளிநொச்சி உதவி தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.சி.அமலராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். கௌரவ விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு அலுவலர் மா.அருள்சந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் வரவேற்பு நடனத்தை காவேரி கலாமன்றத்தினர் நிகழ்த்த உள்ளனர். வரவேற்புரையை கரைச்சி உதவிப் பிரதேச செயலர் திருமதி சிவகாமி உமாகாந்தன் நிகழ்த்தவுள்ளார்.

கரைஎழில் 2014 நூலின் வெளியீட்டுரையை காவேரி கலாமன்ற இயக்குநர் கலாநிதி ரி.எஸ்.ஜோசுவா நிகழ்த்த ஆய்வுரையை மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் நிகழ்த்தவுள்ளார். கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் கலை பண்பாட்டிற்கு உயர் சேவையாற்றிய பெருமக்களுக்கு கரை எழில், உயர் கரைஎழில் ஆகிய விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கலாநிதி ஆறு திருமுருகனின் கலாசார விழுமியங்களைப் பாதுகாத்தல் எனும் தலைப்பில் சிறப்புரையும் நடைபெறவுள்ளது.(90)



# வெளியாரின் தலையில் வைத்து நன்றாக நடக்கும் வியாபாரம்




**இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் பற்றிய ஐ.நா. விசாரணை அறிக்கையை ஒத்திவைக்க வேண்டாம். ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினர் இலங்கைக்கு வந்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். சாட்சியம் வழங்குவோருக்குப் போதிய பாதுகாப்புடன் சர்வதேச விசாரணையாளர்கள் விசாரணை செய்ய வேண்டும். அதன் மூலமாக முறையான அறிக்கை ஒன்றைத் தயாரிக்கவும் ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பித்த பின்னர் சர்வதேச விசாரணைக்கு இட்டுச்செல்வதற்கும் அவசியமான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும்** என்ற பல கோரிக்கைகளோடு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தினர் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

இது நடந்தது 24.02.2015 செவ்வாய்க்கிழமை.

ஐ.நா.சபைப் பொதுச் செயலாளரின் உயர்மட்டக் குழுவினர் திங்கட்கிழமை (02.03.2015) அன்று யாழ்ப்பாணத்திற்கு வந்து, பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர் என்று இப்பொழுது செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தச் செய்திகளைப் படிக்கும்போது, அல்லது இந்தச் சம்பவங்களை அவதானிக்கும் போது, ஏதோ பல்கலைக்கழக சமூகத்தினரின் போராட்டங்களை அடுத்துத்தான் ஐ.நா.அதிகாரிகள் அவசர அவசரமாக யாழ்ப்பாணத்துக்கு வருகிறார்கள் என்று தோன்றும். ஊடகங்களும் அப்படியான ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கத்தான் முயற்சிக்கின்றன. இந்த மாதிரியான விளையாட்டுகள் முன்பும் பலதடவைகள் நடந்திருக்கின்றன.

மக்களின் எதிர்பார்ப்பையும் இவர்களுடைய மனதின் உள்ளக்கொதிப்புக்களையும் வடியவைக்கும் நடவடிக்கை இது. இதை நேரடியான எந்தவகையான ஒளிவுமறைவுமில்லாமல் சொல்வதாக இருந்தால், சனங்களை ஏமாற்றும் முயற்சி.

கடந்த ஆண்டுக்கு முதல் ஆண்டு இதேபோல பல எதிர்பார்ப்புக்களை உண்டாக்கியவாறு ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளை வந்திருந்தார்.

அதற்கு முன்னர் மக்களின் மனதில் இருந்த கொதிநிலையை வடிந்துபோகச் செய்தது நவிப்பிள்ளையின் அந்த வருகை.

ஆனால், நவிப்பிள்ளையின் வருகையை தாம் உண்டாக்கிய ஒரு ஏற்பாடே என்ற மாதிரி சில அரசியல் கட்சிகளும் சில ஊடகங்களும் காட்ட முற்பட்டன.

நவிப்பிள்ளை வந்து போனதோடு, சனங்களிடம் இருந்த கொதிப்பும் போனது.

அதைப்போல இப்பொழுது ஐ.நா.பிரதிநிதி சனங்களின் கொதிப்பை வடிந்து போகச் செய்வதற்காக வந்திருக்கிறார்.

போர்க்குற்ற விசாரணைகள் மற்றும் போர்க்குற்றம் பற்றிய அறிக்கையைச் சமர்ப்பிக்காமல், அதைச் செப்ரெம்பர் வரை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் ஒத்திப் போட்டதையிட்ட ஏமாற்றத்தோடும் கோபத்தோடும் இருந்த மக்களைச் சமாளிப்பதற்கே இந்த வருகை என்பதை ஊடகங்கள் எழுதவில்லை.

இது மட்டுமல்ல, வெளிநாட்டுப் பிரதிநிதிகள் எவர் வந்தாலும் அவர்களிடம் எமது அரசியல்வாதிகள் தொடக்கம் எமது புரட்சிகரத் தமிழ் ஊடகங்கள் வரையில் எவரும் முறையாகக் கேள்விகளை எழுப்புவதில்லை. பதிலாக அவர்களை தேவதூதர்களாகவும் கடவுளர்களாகவுமே பார்க்கிறார்கள்.

இப்படி ஒவ்வொரு தடவையும் யாரோ ஒரு வெளிநாட்டுத்தலைக்காக காத்திருக்கின்றார்கள் ஈழத்தமிழர்கள்.

வெளியிலிருந்து வருகின்ற தலைகளை வைத்தே தங்கள் வியாபாரத்தைச் செய்கின்றன தமிழ் ஊடகங்கள்.

வெளியிலிருந்து வருகின்ற தலைகளின் கையைப் பிடித்தும் காலைப் பிடித்தும் காலத்தை ஓட்டுகின்றனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.

இதைத்தான் சொல்வது சனங்களுக்குப் 'படம்' காட்டுவது என்று. அல்லது 'றீல்' விடுவது என.

இப்படிச் சொல்வது தவறு என்றால் அவர்களிடம் ஒரேயொரு கேள்வியைக் கேட்கலாம்:

'இப்படி எத்தனையோ வெளிநாட்டுத் தலைவர்களும், தூதர்களும் மனித உரிமை சம்மந்தமான அதிகாரிகளும் வந்து போயிருக்கிறார்கள். கண்ணீர் மல்க எவ்வளவோ கதைகளையெல்லாம் தமிழ்த்தரப்பினர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எல்லாம் நல்லபடிதான் நடந்திருக்கின்றன.

ஆனால், தமிழர்களுடைய எந்தப் பிரச்சினைக்கும் என்ன தீர்வு வந்தது? இவர்கள் வந்து சென்றதால் என்ன மாதிரியான நன்மைகள் உண்டாகின?

● ம. அய்யம்பிள்ளை

நீங்கள் வாழ்க்கையை விரும்புகிறீர்களா, அப்படியானால் நேரத்தை வீணாக்காதீர்கள் - வோல்ட்டன்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இனவெறுப்பும் பகைமையுணர்ச்சியும்!

போர் முடிந்தும் நம்மிடம் இன்னும் மறையாதுள்ள இனவெறுப்பை பகைமையை தணிக்கும் வழிகளை யோசிக்கும்போது, தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா சாதித்தவற்றைப் படிப்பினைகளாகக் கொள்ளத் தோன்றுகிறது.

நாம் நினைத்துப்பார்க்க முடியாதளவுக்கு வெள்ளையர்களால் கீழ்த்தரமாக நசுக்கப்பட்டவர்கள் தென்னாபிரிக்க கறுப்பர்கள். அதாவது மிகமிக இழிவுபடுத்தப்பட்டு ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவரே கொடிய போருக்குப் பின்னான இனஇணக்கத்தை ஏற்படுத்த முயற்சித்து வெற்றிபெறுகிறார்.

இந்த துணிச்சலான மாற்றத்தை ஏற்படுத்திய மண்டேலா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஹொலிவுட் திரைப் படம் INVICTUS.

27 வருட சிறை வாழ்வுக்குப் பின் 1990–ல் விடுவிக்கப்படும் மண்டேலா, 1994–ல் தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாகிறார். அதுவரை ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த வெள்ளையர் மற்றும் கறுப்பர் இனத்தவரிடையே நிலவிக் கொண்டிருக்கும் வரலாற்றுப் பகையையும் நிறவெறியையும் போக்குவதே பிரதான பணி என்பதை உணர்கிறார்.

இந்தப் பகைமை உணர்ச்சியை நிற வேறுபாட்டை மறந்து "தன்னுடைய தேசம்" என்று இரு பிரிவினரையுமே உணரச் செய்ய விரும்புகிறார். இதற்காக அவர் மேற்கொள்ளும் முயற்சிகளே படக் காட்சிகளாக விரிகின்றன.

திரைப்படம் இம்மாதிரியானதொரு காட்சியுடன்தான் தொடங்குகிறது. மண்டேலா சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு வாகனத்தில் வரும் போது கறுப்பினச் சிறுவர்கள் உற்சாகக் குரலெழுப்புகிறார்கள். எதிர்ப் பக்கத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் வெள்ளையச் சிறுவர்களில் ஒருவன் கேட்கிறான். "யார் அது? அந்தத் தீவிரவாதி மண்டேலாவை விட்டு விட்டார்களா?" அவர்களின் பயிற்சியாளர் சொல்கிறார். "ஆமாம் பெடியளே! இனி இந்த தேசம் அந்த நாய்களின் கையில்தான் போகப் போகிறது".

தென்னாபிரிக்க ரக்பி அணியில் வெள்ளையர்களே விளையாடுவதால், கறுப்பர்கள் அனைவரும் தங்கள் நாட்டு அணிக்கு எதிராகவும், எதிர்த்து விளையாடும் வெளிநாட்டு அணிகளை ஆதரித்துமே ஆர்ப்பரிக்கின்றனர்.

இத்தனை ஆண்டு காலமாக தங்களை ஆதிக்கம் செய்து கொடுமைப்படுத்திக் கொண்டிருந்த வெள்ளையர்களை அவர்கள் அவ்வளவு கெதியில் மன்னிக்கத் தயாராக இல்லை.

புதிதாக பொறுப்பேற்றுக் கொள்ளும் விளையாட்டு ஆணைக் குழுவிலுள்ள பெரும்பாலான கறுப்பர்கள், அணியின் நிறம் கொடி போன்றவற்றை மாற்ற தீர்மானம் கொண்டுவருகின்றனர். மண்டேலா இதை விரும்புவதில்லை. இது மேலும் பகைமை உணர்ச்சியையே வளர்க்கும் என்று கருதுகிறார்.

அவரது செயலாளர், "இது ஒடுக்கப்பட்ட பெரும்பான்மையான மக்கள் விரும்புவது, இதற்கு எதிராக நீங்கள் செயல்படுவது உங்கள் பதவிக்கும் அரசியல் எதிர்காலத்திற்கும் ஆபத்தானது" என எச்சரிக்கிறார். "மக்கள் தவறு செய்கிறார்கள். இந்தச் சமயத்தில் அதை எதிர்க்கும் துணிவில்லையென்றால் நான் தலைமைப் பொறுப்பில் இருக்கவே லாயக்கற்றவன்" என்கிறார் மண்டேலா.

"வெள்ளையர்களே விளையாடினாலும் இது எங்களது அணி; இவர்களே நமது தேசிய வீரர்கள்; நமது அணியின் வெற்றிக்கே நாம் உற்சாகப்படுத்த வேண்டும்" என்று கறுப்பர்களுக்குச் சொல்கிறார் மண்டேலா.

மண்டேலாவின் உறவினர்கள் உட்பட அனைவரும் வெள்ளையர்கள் தங்களுக்கிழைத்த கொடுமைகளை அவருக்கு நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கின்றனர். "எல்லாவற்றையும் மன்னிக்க வேண்டிய தருணமிது. இனி நம் சிந்தனை இந்த தேசத்தைப் பற்றினதாக இருக்க வேண்டும்" என்கிறார் மண்டேலா.

வன்முறையுணர்வும் பகைமையுணர்ச்சியும் ஆழமாகப் பதிந்து கிடக்கும் நமக்கும் இவ்வாறான தலைவர்களின் செயற்படு முறைகளிலிருந்து கிடைக்கும் படிப்பினைகளே தேவையாக இருக்கிறது. விடுதலைப் புலிகளின் தலைவருக்குப் பிடித்த நடிகரான கிளின்ட் ஈஸ்ட்வுட் இந்தப் படத்தை இயக்கியிருக்கிறார் என்பது இன்னொரு நகைமுரண்.

- ஆசிரியர்

# இஸ்லாத்தில் அரசியல் உட்புகும்போதே தீவிரவாதம் தோற்றுவிக்கப்படுகிறது

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

இஸ்லாத்தில் அரசியல் உட்புகும்போதே தீவிரவாதம் தோற்றுவிக்கப்படுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நகர அபிவிருத்தி மற்றும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கை - பாகிஸ்தான் நட்புறவுச்சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கை, பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான வரலாறு, பொருளாதாரம், இராணுவம் மற்றும் கலாசார தொடர்புகள் எனும் தலைப்பில் சர்வதேச கருத்தரங்கு கொழும்பு கல்தாரி ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கின் அங்குரார்ப்பண வைபவத்தின்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் ஹக்கீம் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நீண்ட கால உறவு இருந்து வருகிறது. கல்வி, கலாசாரம், பொருளாதாரம் என ஏராளமான துறைகளில் இரு நாடுகளுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றன. இங்குள்ள பாகிஸ்தான் தூதுவராலயமும் சகல விதத்திலும் ஒத்துழைப்புகளை நல்குகின்றது. அத்துடன் கடந்த இரு ஆண்டுகளாக உயர்ஸ்தானிகராக கடமையாற்றிய மேஜர ஜெனரல் ஹாசீம் குரேஷி பாரியளவில் சேவையாற்றியுள்ளார்.

எமது நாட்டில் உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட்டுக் கொண்டிருந்த சவாலுக்குரிய காலகட்டத்தில் சிறந்த முறையில் சேவையாற்றியுள்ளார். அவர் இலங்கையின் நடைமுறைகள் பற்றி நன்கு அறிந்து வைத்திருக்கிறார் என்பது விசேடமானது.

அதேநேரம் இலங்கையில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக இருந்தபோதிலும் பெரும்பான்மையான பௌத்த சமூகத்துடன் இணைந்து நாட்டின் சகல விடயங்களிலும் ஒத்துழைக்கின்றனர். மன்னர் ஆட்சிக் காலம் முதல் இன்றுவரை முஸ்லிம்கள் தங்களின் தனித்துவத்தைப் பேணிக்கொண்டு ஆட்சியாளர்களோடு இணைந்து நாட்டின் அபிவிருத்தியில் பங்காளிகளாகவே செயற்பட்டு வருகின்றனர்.

அவ்வாறிருக்கையில் அண்மைக்காலத்தில் பௌத்த அடிப்படைவாதிகளால் இந்த நாட்டில் இனங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முஸ்லிம்களின் பாரம்பரிய கலாசார விடயங்கள் தொடர்பில் தவறான புரிதல்களை இனங்களுக்குள் உட்புகுத்துவதற்குரிய பாரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் அந்த இலக்கை அவர்கள் பூரணமாக அடையமுடியாது போனது என்றார்.

## ஊடகப்பேச்சாளராக டிலான்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளராக முன்னாள் அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை மன்றக்கல்லூரியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. இந்தக் கூட்டத்தில் டிலான் பெரேரா ஊடகப் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

## வெளிமாவட்ட மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வெளிமாவட்ட மீனவர்களுக்கு தமது கடற்பரப்பினுள் மீன்பிடிக்க அனுமதி வழங்கக் கூடாதென வலியுறுத்தி திருகோணமலை மாவட்ட மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்றுக் காலை ஒன்பது மணி தொடக்கம் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திரியாய், குச்சவெளி, நிலாவெளி, திருகோணமலை பகுதிகளைச் சேர்ந்த சுமார் 800 மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வெளிமாவட்ட மீனவர்களின் அத்துமீறல்களால், பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மீனவர்களின் கோரிக்கை தொடர்பில் கடற்றொழில் திணைகளத்தின் திருகோணமலை மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் உபாலி சமரதுங்க கருத்துத் தெரிவிக்கையில், மீனவர்கள் நாட்டின் எந்தவொரு கடற்பரப்பிலும் மீன்பிடிப்பதற்கு அனுமதியுள்ளது.

திருகோணமலை கடற்பரப்பிற்குள் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான இடம்பெயர் மீனவர்களுக்கு கடற்றொழில் திணைக்களத்தினால் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை கடற்பரப்பில் மீன்வளம் குறையுமானால், அந்த மாவட்ட மீனவர்கள் வெளி மாவட்டங்களில் மீன்பிடிப்பதற்கான அனுமதியை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதேவேளை, சில தினங்களுக்கு முன்னர் வெளிமாவட்ட மீன்பிடி படகொன்று கும்புறுபிட்டி கடற்கரையில் தீக்கிரையாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாடு திரும்புகிறார் சுனந்த தேசப்பிரிய

(கொழும்பு)

கடந்த அரச காலத்தில் விடுக்கப்பட்டிருந்த உயிர் அச்சுறுத்தல் காரணமாக, நாட்டை விட்டுச் சென்று சுவிட்சர்லாந்தில் வாழ்விடம் அமைத்திருந்த பிரபல ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய இம் மாதம் 27 ஆம் திகதி நாடு திரும்புகிறார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கோரிக்கையை ஏற்று இவர் நாடு திரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவின் சகோதரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜெயக்குமாரி விடுதலைக்கு தடைபோடுவது யார்?

### உறவினர் கேட்கின்றனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டு சுமார் ஒரு ஆண்டாக தடுத்து வைக்கப்பட்டுள்ள, பாலேந்திரன் ஜெயக்குமாரியைப் பிணையில் விடுவிப்பதற்கு, சட்டமா அதிபர் திணைக்களம் இழுத்தடிப்புச் செய்து வருகிறதா என்று சந்தேகம் எழுந்துள்ளதாக அவரின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் இவரைப் பிணையில் விடுவிக்கக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனு மீண்டும் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது, சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து எழுத்துபூர்வமான பதில் ஏதும் வழங்கப் படாததால், இந்த மனுவை ஏப்ரல் 10 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக நீதவான் அறிவித்தார்.

இதற்கிடையே பாலேந்திரன் ஜெயக்குமாரியின் பிணை மனு நேற்று விசாரணைக்கு வந்த நிலையில், கொழும்பு புதுக்கடை நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே, ஜெயக்குமாரியை விடுதலை செய்யக் கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.

தீவிரவாத புலனாய்வு பிரிவினரால், 352 நாட்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெயக்குமாரிக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை என்றும், இது ஒரு குற்றச்செயல் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.



**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வரலாற்றில் இதற்கு முன்னரும் பல வல்துசாரி அணிகள் - சி.பி.டி.சில்வா தலைமையில், பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க தலைமையில் - எனத் தோன்றியிருக்கின்றன. ஆனால் அவற்றால் அக்கட்சியை அதன் அடிப்படைக் கொள்கைகளிலிருந்து மாற்ற முடியவில்லை.**

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வரலாற்று வகிபாகம் முடிவடைந்து விட்டதா?

**சுப்பராஜன்**

இலங்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆரம்பிக்கப்பட்டு இற்றை வரையிலான 64 வருடங்களில் சந்திக்காத பெரும் நெருக்கடி ஒன்றை இன்று எதிர்நோக்கியுள்ளது. இந்த நெருக்கடியை உருவாக்கியதில் முக்கியமான பங்கை வகித்தவர்கள் இருவர்.

ஒருவர் அக்கட்சியை 1951இல் ஸ்தாபித்ததில் பிரதான பங்கு வகித்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் புதல்வியும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க. மற்றவர் அவரது எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்த அக்கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளரும், இன்றைய ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன.

இவர்கள் இருவரும் செய்த மிகப் பெரும் தவறு முன்னொரு போதும் இல்லாதவகையில், அக்கட்சியை முன்னர் தலைமை தாங்கியவர்கள் ஒருபோதும் எண்ணிப்பார்த்திருக்காத வகையில், அக்கட்சியின் பரம அரசியல் வாதியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அரசாங்கமொன்றை அமைத்தது. அதற்கு அவர்கள் சொல்லும் ஒரேயொரு காரணம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் எதேச்சாதிகாரம் மிக்க, ஊழல்மிக்க, குடும்ப ஆதிக்கம் உள்ள அரசாங்கத்தை அகற்றுவதற்காகவே ஐ.தே.க.வுடன் புனிதக் கூட்டணி அமைக்கப்பட்டது என்பதுதான். மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் மீது அவர்கள் வைக்கும் குற்றச் சாட்டில் சில உண்மைகள் இருப்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால் அதை எதிர்த்துப் போரடுவதற்கு மக்கள் சக்தியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் என்ற மாபெரும் அணியும் இருக்கத்தக்கதாக காலம் காலமாக நாட்டு மக்களின் பிரதான விரோதியாக இருக்கும் ஐ.தே.க.வின் கூட்டுத்தான் கிடைத்ததா? இது ஒரு உள்ளூர் திருடனைப் பிடிப்பதற்காக சர்வதேச கொள்ளைக்காரனுடன் கூட்டுச் சேர்வதற்கு ஒப்பானதே அன்றி வேறல்ல.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்த பண்டாரநாயக்கவும், அவரது சகாக்களான டி.ஏ.ராஜபக்ச (மகிந்த ராஜபக்ஷவின் தகப்பனார்), எஸ்.டி.பண்டாரநாயக்க (முன்னாள் கம்பஹா நாடாளுமன்ற உறுப்பினர்) போன்றோரும் ஒரு அரசியல் கட்சியை உருவாக்க வேண்டும் என்ற வெறும் ஆசையில் அதை உருவாக்கவில்லை.

சுதந்திர இலங்கையின் முதலாவது அரசைப் பொறுப்பேற்ற டி.எஸ். சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க. அரசு நாட்டுக்கு விரோதமான ஏகாதிபத்திய சார்புக் கொள்கையையும், பிற்போக்கான நிலப்பிரபுத்துவ சார்பு, முதலாளித்துவ சார்புக் கொள்கைகளையும் பின்பற்றிய காரணத்தினாலேயே அவ்வரசில் அங்கம் வகித்த பண்டாரநாயக்கவும் அவரது சகாக்களும் அதிலிருந்து வெளியேறி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கினர்.

அவர்களது கொள்கைகளை மக்கள் பெருமளவில் விரும்பி ஆதரித்த காரணத்தால்தான் கட்சி ஆரம்பித்து 5 வருடங்களில் - 1956 இல் - சுதந்திரக் கட்சி அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றியது. அன்றிலிருந்து பண்டாரநாயக்கவும், பின்னர் அவர் 1959 இல் பிற்போக்கு சக்திகளால் படுகொலை செய்யப்பட்ட பின்னர் அவரது மனைவி சிறீமாவோவும், தீவிரமான ஏகாதிபத்திய விரோத, நிலப்பிரபுத்துவ விரோத, பெரும் முதலாளித்துவ விரோத மக்கள் சார்புக் கொள்கைகளை முன்னெடுத்து வந்திருக்கின்றனர்.

ஏகாதிபத்திய சக்திகளும், ஐ.தே.க. தலைமையிலான உள்ளூர் பிற்போக்கு சக்திகளும் அவர்களுக்குப் பல விதமான நெருக்கடிகளைக் (கொலை, இராணுவச்சதி முயற்சி)

**இனிவரும் காலங்களிலும் கூட, ஐ.தே.க.வினால் தனித்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது என்பது வெளிநாட்டு வல்லாதிக்க சக்திகளுக்குத் தெரியும். அதனால் ஐ.தே.க.வுக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஒட்டுப்போட்டு, இரண்டு முதலாளித்துவக் கட்சிகளையும் ஒரு அணியாக்கி அந்தக் குதிரையின் மீது சவாரி செய்ய இந்த வெளிநாட்டு சக்திகள் திட்டமிடுகின்றன.**

கொடுத்த போதும், அவர்கள் தமது நடவடிக்கைகளிலிருந்து ஒருபோதும் பின்வாங்கவில்லை. அதற்கு ஒரு காரணம் அவ்வரசுகளுககு இடதுசாரிக் கட்சிகள் கொடுத்த ஆதரவுமாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமை தாங்கிய அரசுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஓரளவு தளர்ந்திருந்த காலம் சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலம் என்று சொல்லலாம். அதற்கு ஒரு கார்ணம் அவர் மேற்கத்தைய சக்திகளைப் புலிகளுக்கு எதிரான போரில் 'வென்றெடுப்பதற்காக' என்று இன்று சில அவரது ஆதரவாளர்கள் காரணம் கூறினாலும், அதனாலும் கூட அவர் எதனையும் பெரிதாகச் சாதித்துவிடவில்லை.

அவரது மேற்கத்தைய சார்பான வெளிநாட்டு அமைச்சரான லக்ஸ்மன் கதிர்காமரின் முயற்சிகள் காரணமாக மேற்கத்தைய நாடுகள் புலிகளைத் தமது நாடுகளில் தடை செய்தாலும், அதற்குப் பிரதியுபகாரமாக நோர்வேயின் எரிக் சொல்கெய்ம்மை சமாதான முயற்சிகள் என்ற போர் வையில் இலங்கை விவகாரங்களில் உள் நுழைத்து அப்பம் பங்கிடும் குரங்குகளாக இருந்து கொண்டன.

மறுபக்கத்தில் பொருளாதார ரீதியாகவும் இலங்கையை அந்நிய ஆதிக்கத்திலிருந்து மேலும் கூடுதலாக விடுவிக்கும் நடவடிக்கைகளையோ, பாரிய பொருளாதார நடவடிக்கைகளையோ சந்திரிகாவின் அரசு மேற்கொள்ளவில்லை. இக்காலகட்டத்தில் மேற்கத்தைய நாடுகளைத் திருப்திப்படுத்தும் விதமாக சந்திரிகா சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசின் கொள்கைகளை சமனப்படுத்தி அல்லது சமரசப்படுத்திக் கொண்டார்.

புலிகளுக்குள் பிளவு தோன்றி அவ்வியக்கத்தின் கிழக்கு மாகாணத் தளபதிகளான கருணா, பிள்ளையான் போன்றோர் பிரிந்து சென்று அவ்வியக்கம் பலவீனப்பட்டபொழுது, புலிகளின் தலைவர் பிரபாகரன் கிழக்குப் புலிகளை அழிப்பதற்கு வடக்கிலிருந்து தனது படையணிகளை அனுப்பி வைத்தார். அந்த நேரத்தில் சந்திரிகாவின் இராணுவம் பிரபாகரனின் படைகள் வெருகல் ஆற்றைக் கடந்து வாகரைக்குச் சென்று பிரபாகரனுக்கு எதிரான கிளர்ச்சிப் புலிகளை அழிப்பதற்கு வழிவிட்டதால் அநியாயமாக 300 வரையிலான் கிளர்ச்சிப் புலிகள் கொல்லப்பட்டனர். இதுவும் அவரது ஆட்சியின் கறைபடிந்த ஒரு அத்தியாயம்.

இத்தகைய சூழ்நிலையில்தான் 2005இல் ஜனாதிபதியாகத் தெரிவான மகிந்த ராஜபக்ஷ, உள்நாட்டு யுத்தத்திற்கு முடிவு கட்டினார். மகிந்தவின் இந்த நடவடிக்கைகளும், இலங்கையை தமது ஒரு ஆதரவுத் தளமாக மாற்றுவதற்கு எத்தனித்துக் கொண்டு இருந்த வெளிநாட்டு சக்திகளின் திட்டங்களுக்கு இடம் கொடாமையும்தான், மகிந்தவின் அரசை உள்நாட்டு - வெளிநாட்டுச் சக்திகள் கூட்டுச் சேர்ந்து வீழ்த்தியதற்கான முக்கியமான காரணம்.

அவரது அரசின் எதேச்சாதிகாரம், ஊழல், குடும்ப ஆட்சி எனக் கூறப்படும் கர்ரணங்கள் எல்லாம் (சில உண்மைகள் இருந்தபோதும்) உண்மையை மறைப்பதற்கு தொங்கவிடப்பட்ட திரைகளாகும்.

தமது பழைய நம்பிக்கை நட்சத்திரமான ஐ.தே.க. இலங்கையில் ஒளி குன்றிப் போனதனால்தான் வெளிநாட்டு வல்லாதிக்க சக்திகள் இந்தமுறை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்தவரையே தமது பக்கம் இழுத்தெடுத்து ஆட்சி அதிகாரத்தைத் தமக்கு சாதகமாக ம்ாற்றியமைத்துள்ளனர். அதற்கு சந்திரிகா துணை போனதின் மூலம் அக்கட்சியில் தனது தந்தை - தாய் உருவாக்கிய ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாரம்பரியத்துக்கு விரோதமாகச் சென்றுள்ளார்.

இனிவரும் காலங்களிலும் கூட, ஐ.தே.க.வினால் தனித்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது என்பது வெளிநாட்டு வல்லாதிக்க சக்திகளுக்குத் தெரியும். அதனால் ஐ.தே.க.வுக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஒட்டுப்போட்டு, இரண்டு முதலாளித்துவக் கட்சிகளையும் ஒரு அணியாக்கி அந்தக் குதிரையின் மீது சவாரி செய்ய இந்த வெளிநாட்டு சக்திகள் திட்டமிடுகின்றன. ஆனால் அது நடக்கப் போவதில்லை.

ஏனெனில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ன நோக்கத்துக்காகத் தோற்றுவிக்கப்படதோ அதன் வரலாற்றுக் கடமை இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை. நாட்டின் பூரண சுதந்திரம், இறைமை, ஜனநாயக அரசமைப்பு என்பன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகள். இந்த இலக்குகளை ஒரு இடது சாரித் தலைமையால்தான் பூரணமாக நிறைவேற்றமுடியும் என்ற போதிலும், நாட்டின் அனைத்து தேசபக்த சக்திகளையும் கூடுதலான அளவில் அளாவி நிற்கும் சுதந்திரக் கட்சிக்கு அதில் இன்னமும் முக்கியமான ஒரு பங்களிப்பு இருக்கிறது. அக்கட்சி பிரதிநிதித்துவம் செய்யும் சக்திகளின் பங்களிப்பு இல்லாமல் இந்தக் கடமையை இடதுசாரி சக்திகளால் ஒருபோதும் தனித்து நிறைவேற்ற முடியாது. எனவே தனி மனிதர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையோ அல்லது நாட்டின் தலைவிதியையோ மாற்றுவதற்கு எத்தனித்தாலும், மக்களும் வரலாற்றுப் போக்கும் அதற்கு ஒருபோதும் இடம் கொடுக்கப்போவதில்லை. அதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள பெரும்பான்மையினர் தமது கருத்துக்கள் மூலம் உறுதிப்படுத்தியும் வருகின்றனர்.

இன்றைய மாற்றம் என்பது தற்காலிகமானது மட்டுமே. சுதந்திரக் கட்சியின் வரலாற்றில் இதற்கு முன்னரும் பல வலதுசாரி அணிகள் - சி.பி.டி.சில்வா தலைமையில், பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க தலைமையில் - எனத்தோன்றியிருக்கின்றன. ஆனால் அவற்றால் அக்கட்சியை அதன் அடிப்படைக் கொள்கைகளிலிருந்து மாற்ற முடியவில்லை.

அதேபோல இப்பொழுது அக்கட்சியில் உருவாகியுள்ள சந்திரிகா - மைத்திரிபால சிறிசேன வலதுசாரி அணியின் பிடியிலிருந்தும் சுதந்திரக் கட்சி நிச்சயமாக மீண்டு எழுந்து வரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

# நிதிச்சட்டத்திற்கு புறம்பான உத்தரவுகளை ஏற்க வேண்டாம்

## நிதியமைச்சர் கோரிக்கை



நாட்டின் நிதிச் சட்டங்களுக்கு புறம்பான வகையில் உத்தரவுகளை அமைச்சர்கள் பிறப்பித்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, அரச வங்கிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிதி நிறுவனங்களின் அதிகாரிகளிடம் கோரியுள்ளார்.

நானோ அல்லது வேறு அமைச்சர்களோ நிதிச் சட்டங்களுக்கு புறம்பான வகையில் உத்தரவுகளை பிறப்பித்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டாம்.

அதிகாரத்தை எந்த நேரத்திலும் துஷ்பிரயோகம் செய்யக் கூடாது.

நிதி ஒழுக்கவிதிகள் பூரணமாக பின்பற்றப்பட வேண்டியது அவசியமானது.

எங்காவது ஓர் இடத்தில் நிதிக் குற்றச் செயல் மோசடிகள் இடம்பெற்றால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அரச வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் தலைவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு தொடர்பில் சர்ச்சைகள் நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும் என அமைச்சர் கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

வங்கித் தலைவர்கள் நிதி நிறுவனத் தலைவர்களுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# சூழலுக்கு பாதிப்பு இல்லாத மணல் அகழ்வுத்திட்டம்

சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பயன்பெறக்கூடிய மணல் அகழ்வு தொடர்பில் ஆராயும் நாடளாவிய திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தீர்மானித்துள்ளது.

இதன்பொருட்டு மாவட்ட ரீதியாக குழுக்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் பெர்னாட் பிரேம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்பிற்கு அமைவாக இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த திட்டத்தின் கீழ், நாடு முழுவதிலும் மணலை அகழும் இடங்கள் தொடர்பில் கணக்கெடுப்பு நடத்துவதற்கு புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தீர்மானித்துள்ளது.

இதனையடுத்து, மணல் அகழ்விற்கு உகந்த இடங்கள் குறித்து அறிக்கையொன்றை தயாரிப்பதற்கும் திட்டமிட்டுள்ளதாக பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி மைத்திரிபால லண்டன் பயணம்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இங்கிலாந்திற்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணமாக இன்று லண்டன் நோக்கி பயணிக்கவுள்ளார்.

ஜனாதிபதி பதவியேற்றதன் பின்னர் இரண்டாவது வெளிநாட்டு விஜயம் மேற்கொள்ளும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வரவேற்பதற்காக இலண்டன் விமான நிலையத்தில வரவேற்பு நிகழ்வொன்றை பிரித்தானிய அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரித்தானிய இளவரசி எலிசபெத் மகாராணியின் அழைப்பிற்கமையவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இங்கிலாந்து நோக்கிப்பயணிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் குறித்த விஜயத்தில் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர, மீள்குடியேற்ற அமைச்சர சுவாமிநாதன், மற்றும் மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி, வெளியுறவு அமைச்சின் செயலாளர் சித்ராங்கனி, ஜனாதிபதி செயலாளர் பி.பி அபயகோன் உட்பட 20 அதிகாரிகள் கலந்துகொளளவுள்ளனர்.

# விசாரணைகளை துரிதப்படுத்துமாறு பவித்ரா வன்னியாராச்சி கோரிக்கை



எனக்கு எதிரான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு முன்னாள் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கோரியுள்ளார்.

பவித்ரா வன்னியாராச்சிக்கு எதிராக கையூட்டல் மற்றும் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென பவித்ரா வன்னியாராச்சி, கையூட்டல் மற்றும் மோசடி தவிர்ப்பு பிரிவின் பணிபபாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

எனக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக இலத்திரனியல் ஊடகங்களின் மூலம் அறிந்து கொண்டேன். இந்தக் குற்றச்சாட்டுக்கள் போலியானவை

எனக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நன்மதிப்புக்கு களங்கம் ஏற்படும் வகையில் அமைந்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் துரித கதியில் விசாரணை நடாத்துமாறு கோரிக்கை விடுக்கின்றேன் என பவித்ரா வன்னியாராச்சி எழுத்து மூலம் சவால் விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விரைவில் விசாரணை

முன்னாள் மின்வலு எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் பொலிஸார் விசாரணை நடாத்த உள்ளனர். பாரியளவில் இடம்பெற்ற நிலக்கரி மோசடி தொடர்பில் இந்த விசாரணை நடாத்தப்பட உள்ளது. எதிர்வரும் நாட்களில் இது தொடர்பிலான விசாரணை நடத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

528 மில்லியன் ரூபா பெறுமதியான நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடாத்தப்பட உள்ளது. இந்தச்சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று உயர் அதிகாரிகளிடம் ஏற்கனவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிதி மோசடி தொடர்பில் மின்வலு மற்றும் எரிசக்தி அமைசசின் செயலாளர் டாக்டர் பெர்டினான்டஸிடம் விசாரணை நடாத்தப்பட உள்ளதாகவும் அதற்காக சர்வதேச ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸ் தலைமையகத்தின் விசேட பிரிவொன்று இந்த விசாரணைகளை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சுயாதீன ஆணைக்குழுக்கள் ஒருமாத காலத்திற்குள் நிறுவப்படும்

## -பிரதமர் ரணில் தெரிவிப்பு



ஒரு மாத காலத்திற்குள் சுயாதீன ஆணைக குழுக்கள் நிறுவப்படும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

17ஆம் திருத்தச் சட்டத்திற்கு அமைவான முறையில் சுயாதீன ஆணைக் குழுக்களை அமைக்கும் பணிகள் ஒரு மாத காலத்திற்குள் பூர்த்தியாகும் என பிரதமர் அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

அரசியல் அமைப்பு திருத்தம் தொடர்பிலான உத்தேச வரைவுத் திட்டம் தயாரிக்கும் பணிகளும் பூர்த்தியாகியுள்ளன.

தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய இவ்வாறு சுயாதீன ஆணைக்குழு நிறுவப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் இந்த அறிவிப்பு குறித்து அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரட்னவும் கருத்து வெளியிட்டிருந்தார்.

# வெளிநாடுகளில் நிதிமோசடி; விசாரிக்க உலக வங்கிக்குழு வருகை

(கொழும்பு)

வெளிநாடுகளில் கடந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணையை மேற்கொள்ள உலக வங்கியின் விசேடகுழு ஒன்று இலங்கை வந்துள்ளது.

திருடப்பட்ட சொத்துக்களை மீட்கும் பணிகளில் ஈடுபடும் குழுவே இலங்கைக்கு வந்துள்ளதாக நிதியமைச்சு தெரிவிததுள்ளது.

அண்மையில் அமெரிக்காவுக்கு சென்றிருந்த வெளியுறவு அமைசசர் மங்கள சமரவீர உட்பட்ட குழுவினர் இது தொடர்பில் கலந்துரையாடல்களை நடாத்தியிருந்தனர்.

கடந்த அரசாங்கத்தின் அதிகாரிகளால் வெளிநாடுகளில் பெருந தொகைப் பணம் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இது இலங்கை மக்களிடம் இருந்து திருடப்பட்ட பணம் என்று பொருளாதாரத்துறை பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த கறுப்புப் பணங்களை கண்டுபிடிக்க இந்தியாவின் உதவியையும் இலங்கை அரசாங்கம் நாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தகவல்களின்படி 2013ஆம் ஆண்டில் மாத்திரம் இலங்கையில் இருந்து 700 பில்லியன் ரூபா இலங்கைக்கு வெளியில் எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாகத தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊழல்மோசடி விசாரணைகளை குழப்புவோருக்கு இடமாற்றம்



ஊழல் மோசடி விசாரணைகளை குழப்பும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்ற உத்தரவு வழங்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கையூட்டல் மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விசாரணைகளை சீர்குலைக்க அல்லது விசாரணைகளை மந்த கதியில் மேற்கொள்ளும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்படுவார்கள்.

100 நாள் வேலைத் திட்டத்திற்குள் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை கண்டறிந்து தராதரம் பாராது தண்டிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளை துரிதப்படுத்தி குற்றவாளிகள் விரைவில் நீதியின் முன் நிறுத்தப்படுவர் என ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

# 90 நாட்கள் காவலில் வைத்து பகீரதியை விசாரிக்க உத்தரவு

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கடந்த திங்கட்கிழமையன்று கைது செய்யப்பட்ட புலிகளின் கடற்புலி மகளிர் அணியைச்சேர்ந்த முருகேசு ஜெயகணேஸ் பகீரதியை 90 நாட்கள் காவலில் வைத்து விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

41வயதான பகீரதியும் அவரது 8 வயது மகளும் பரந்தனுக்கு வந்து மீண்டும் பிரான்ஸிற்கு திரும்புவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்றிருந்த போது கைது செய்யப்பட்டனர்.

இதன்பின்னர் அவர்கள் 72 மணித்தியால ஆரம்பக்கட்ட விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டனர். இதனையடுத்து மேலதிக விசாரணைகளுக்காக 90 நாள் காவல் உத்தரவை பெற்றுள்ளதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் விசாரணையை விரைவில் முழுமைப்படுத்த முடியும் என்று தாம் நம்புவதாகவும் பொலிஸ் தரப்பு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை தமது பிரஜையின் கைது தொடர்பில் பிரான்ஸ் தூதரகம் சட்டஉதவிகளை வழங்கி வருகிறது. எனினும் அது தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை.

இலங்கை பொலிஸ் தரப்பு தகவலின்படி, பகீரதி1997முதல் 2000 ஆம் ஆண்டு வரை விடுதலைப்புலிகளின் கடற்புலி பிரிவில் தீவிர உறுப்பினராக இருந்துள்ளார்.

எனினும் 2005ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவர் பிரான்ஸிற்கு சென்றுவிட்டார் என்று தெரிய வந்துள்ளது.



## சொல்லாத சேதி

தமிழ் ஊடகங்கள் சொல்லாதவையும், சொல்ல மறுப்பவையும்

எஸ். அனசூயா

# தேர்தல் தினத்தன்று இரவு நடந்தது என்ன?

## சதிப்புரட்சித் திட்டம் நடைபெறவே இல்லை என்கிறார் முன்னாள் இராணுவத் தளபதி



ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற தினம் இரவு அல்லது அடுத்த நாள் காலை சதிப்புரட்சி ஒன்றைச் செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை, அப்போது இராணுவத்தளபதியாக இருந்த ஜெனரல் தயா ரத்னாயகா திட்டவட்டமாக மறுத்துள்ளார். இது வெறும் அரசியல் ரீதியான தவறான குற்றச்சாட்டு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதியாக இருந்து அண்மையில் ஓய்வுபெற்ற ஜெனரல் தயா ரத்னாயகாவை டெய்லி மிரர் பத்திரிகை செவ்வி கண்டபோதே அவர் இந்தத் தகவலை உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தில் இருந்து மிக அதிகளவான உயர் பட்டங்களுடன் ஓய்வுபெற்ற ஒரு தளபதி என்ற வகையில் தான் மிகவும் பெருமைப்படுவதாக இந்தச் செவ்வியில் குறிப்பிட்டிருக்கும் ஜெனரல் ரத்னாயகா, தேர்தல் தினத்தன்று இரவு நடைபெற்ற விடயங்கள் தொடர்பாக கேட்கப்பட்டபோதே, சதிப்புரட்சி தொடர்பாகச் சொல்லப்படுவதெல்லாம் சுத்தப் பொய் என்று மறுப்புத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் தினத்துக்கு அடுத்தநாள் அதிகாலை 2 மணியளவில் தான் உட்பட முப்படைகளின் தளபதிகளும், பொலிஸ்மா அதிபரும் அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ள ஜெனரல் ரத்னாயகா, பாதுகாப்பு தலைமை அதிகாரியினாலேயே (Chief of Defence Staff) தாம் அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்டதாகவும், அன்றைய ஜனாதிபதி தம்மை அழைத்ததாகக் கூறப்படுவதிலும் உண்மை இல்லை என்றும் தனது செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பில் சதிப்புரட்சி ஒன்றைச் செய்வது குறித்து எதுவும் பேசப்பட்டதா என்று பல தடவைகள் செவ்வி கண்டவர் மீண்டும் மீண்டும் துருவித் துருவிக் கேட்டபோதும், அப்படி எதுவுமே பேசப்படவில்லை என்று திட்டவட்டமாக ஜெனரல் ரத்னாயகா பதிலளித்துள்ளார்.

உண்மையில், ஆட்சியை எவ்வாறு சுமுகமாக கையளிப்பது என்பது குறித்தே இதன்போது பேசப்பட்டதாகவும், ஜனாதிபதி செயலகம் மூலம் இதுதொடர்பான ஒரு ஊடக அறிக்கையை வெளியிடுமாறும், எதிர்க்கட்சித் தலைவரை அழைத்து இதுகுறித்துப் பேசி இறுதி முடிவு எடுக்குமாறும் தாம் ஆலோசனை கூறியதாகவும் ஜெனரல் தயா ரத்னாயகா இந்தச் செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தவேளை அங்கு கூடியிருந்த பலர் சற்று உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ள அவர், எத்தகைய ஒரு சூழ்நிலையிலும் உணர்ச்சிவசப்படாமல் செயற்படுவதற்கு நன்கு பயிற்றுவிக்கப்பட்ட படைத்தரப்பு இந்த இடத்தில் ஆலோசனைக்கு அழைக்கப்பட்டது நல்ல விடயமே என்றும், இதன் காரணமாகத்தான் சுமுகமான முறையில் ஆட்சிக்கையளிப்பு நடைபெற்றது என்றும் விபரித்துள்ளார்.

தேர்தல் தினத்தன்று அதிகளவு படையினர், குறிப்பாக இராணுவத்தின் கஜபா அணியினர் கொழும்பில் குவிக்கப்பட்டதாக கூறப்பட்டதையும் திட்டவட்டமாக இந்தச் செவ்வியில் மறுத்துள்ள ஜெனரல் ரத்னாயகா, பொலிஸார் தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதை இலகுபடுத்தும் நோக்குடன், தேர்தலுக்கு முன்னதாகவே, பொலிஸாரின் கடமைகளை இராணுவத்தினர் பொறுப்பேற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டதாகவும், இது உரிய முறையில் நாடு தழுவிய ரீதியாக செய்துமுடிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தேர்தல் வரலாற்றிலேயே 80 சதவீதம் மக்கள் வாக்களித்த, மிகவும் அமைதியாக நடைபெற்ற ஒரு தேர்தலாக இம்முறை ஜனாதிபதித் தேர்தல் அமைந்திருந்ததைச் சுட்டிக்காட்டிய ஜெனரல் ரத்னாயகா, இந்தப் பெருமை இராணுவத்தினரையே சாரும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்துக்குள் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தலையீடுகள் இருந்ததா என்று கேட்கப்பட்டபோதும், அப்படி எதுவும் இருக்கவில்லை என்று பதிலளித்த ஜெனரல் ரத்னாயகா, உண்மையில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் காலத்தில், அவரது வழிகாட்டலின் கீழேயே இலங்கைப் படைகள் தொழில்முறைத் தேர்ச்சிமிக்கவையாக மாற்றியமைக்கப்பட்டன என்றும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் போராளிகளை மீண்டும் சமூகத்தில் இணைக்கும் சவால் மிக்க பணியை, உலகின் வேறெந்த முன்னுதாரணமும் இல்லாமல் இலங்கை இராணுவம் முற்றிலும் தாமே வகுத்த திட்டத்தின் மூலம் செம்மையாகச் செய்து முடித்தது என்றும், இதுவரையில் விடுவிக்கப்பட்ட எந்த முன்னாள் போராளியும் மீண்டும் சமூகவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடவில்லை என்பது தமக்குக் கிடைத்திருக்கும் மிகப்பெரும் வெற்றி என்றும் ஜெனரல் ரத்னாயகா இந்தச் செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இராணுவம் அரசியல்மயப்படுத்தப்பட்டதாகவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக தான் பிரசாரம் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்துமே வெறும் புரட்டு என்றும் விபரித்துள்ள அவர், உண்மை நிலைமையை அறியாதவர்கள் திட்டமிட்டுப் பரப்பியுள்ள பொய்த்தகவல்களே இவை என்றும் குற்றஞ் சாட்டியுள்ளார். இராணுவத்தினரின் வழமையான செயற்பாட்டு ஒழுங்குகளுக்கு அமைய படைமுகாம்களுக்கு தாம் விஜயம் செய்ததை தேர்தல் பிரசாரம் நடைபெற்றதாக இவர்கள் விபரிப்பதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், இராணுவ முகாம்களில் தாம் உரையாற்றிய பேச்சுக்களின் ஒலி, ஒளிப் பதிவுகள் இப்போதும் இருப்பதாகவும், வேண்டுமானால் யாரும் அவற்றைப் பார்த்து அப்படி ஏதும் பிரசாரம் நடைபெற்றதா என்று கண்டுகொள்ளலாம் என்றும் சவால் விடுத்துள்ளார்.

# கல்லுண்டாயில் திண்மக்கழிவு வலி.தென்மேற்கில் நோய்த்தாக்கம்

## சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட கல்லுண்டாய் வெளியில் மனித சமுதாயத்திற்கு ஆபத்தான முறையில் கொட்டப்படும் முறையற்ற திண்மக் கழிவுகளால் மக்களுக்கு பாரிய சுகாதாரப் பிரச்சினை ஏற்படும்.

2014 இல் நெருப்புக்காய்சலுக்கு 34 பேரும், வயிற்றுளைவு 142 ஆக 176 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜி.ரஜீவ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லுண்டாய் வெளியில் முறையற்ற திண்மக் கழிவுகளால் ஏற்படக் கூடிய சுகாதாரப் பிரச்சினை தொடர்பாக 6 பிரதான தலைப்புக்களில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்து விலாவாரியாக வெளிக்காட்டியுள்ளார்.

அதன் விபரம் வருமாறு,

❒ நீர் மூலம் மாசடைதல் - கல்லுண்டாய் வெளியில் திண்ம கழிவு, மலக்கழிவு என்பன சரியான முறையில் அகற்றப்படாததால் வயிற்றோட்டம், வாந்தி பேதி, நெருப்புக்காய்ச்சல், வயிற்றுழைவு போன்ற நோய்கள் விரைவாக பரவும் ஆபத்து உண்டு.

2014 ஆம் ஆண்டு நெருப்புக்காய்சலுக்கு 32 பேரும், வயிற்றுழைவுக்கு 142 பேருமாக 174 பேர் மொத்தமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

❒ வளிமாசடைதல் - கல்லுண்டாய் வெளியில் கொட்டப்படும் திண்மக்கழிவுகள், மலக்கழிவுகள் எரிக்கப்படுவதனால் இப்புகையானது நவாலி, ஆனைக்கோட்டை பகுதிகளில் உள்ள மக்களுக்கு சுவாசம் சம்பந்தமான நோய்கள் ஏற்படக் கூடிய அபாயம் உள்ளது.

❒ கட்டாக்காலிகளின் பெருக்கம் - கல்லுண்டாய் கழிவுகளால் அதிகரித்துள்ள விலங்கு விசர் நோய் பெரும் ஆபத்தாக உள்ளது.

2014 ஆண்டு ஒரு மரணம் அப்பிரதேசத்தில் ஏற்பட்டுள்ளது.

❒ கல்லுண்டாய் கழிவுகள் வகைதொகையற்று கண்ட படி வீசப்படுகிறது. இதனை பறவைகள், விலங்குகள், காற்று என்பவற்றினால் இப்பகுதியில் உள்ள விவசாய நிலங்கள், கிணறுகள், குடியிருப்புகள் போன்றவற்றை சென்றடைந்து பெரும் சுகாதார பிரச்சினையை எதிர்நோக்கும் வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (92)

## கைதடி முதியோர் இல்லத்தில் மகளிர்தின நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

கைதடி வடக்கு செல்வா சனசமூக நிலையத்தின் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் நாளை ஞாயிற்றுக்கிழமை சர்வதேச மகளிர் தினத்தை கைதடி அரச முதியோர் இல்லத்தில் முதியோர்களுடன் கடைப்பிடிக்கவுள்ளனர்.

சங்கத்தின் தலைவி திருமதி லனிதா மதியழகனின் தலைமையில் பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ள நிக்ழ்வில் ஆசியுரையை சங்கத்தின் முன்னாள் தலைவி திருமதி ஜெனிற்றா றஞ்சித்குமார் நிகழ்த்தவுள்ளார்.

சங்க உறுப்பினர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. நன்றியுரையை சங்கத்தின் தலைவி செல்வி க.தக்சாயினி நிகழ்த்தவுள்ளார். (90)

# ஞானவைரவர் கோவில் வீதி துரிதமாக புனரமைப்பு



(நீர்வேலி)

நீர்வேலி வடக்கு ஞான வைரவர் கோவில் வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

பல வருடங்களாக திருதப்படாது குன்றும் குழியுமாக இருந்த வீதியினை திருத்தி தருமாறு மக்கள் பலமுறை வலி.கிழக் குப் பிரதேச சபைக்கு கடிதங்கள் மூலமும் அறிவித்து வந்த நிலையில் தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

எனினும் இவ்வீதியுடன் கிழக்குப் பக்கமாக இணையும் கேராளி வத்தை வீதியும் கடந்த வருடம் முழுமையான வீதியாக திருத்தப்படவில்லை.

தற்போது இவ்வீதி திருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் இதனுடன் திருத்தப்படாது இருக்கும் காளி கோவில் வரையுமான மீதி வீதியையும் திருத்துமாறு மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இவ்வீதி கடும் சேதமுற்று மழை காலங்களில் சிரமங்களின் மத்தியிலேயே பயணிக்கவேண்டியுள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (85)

வடக்கின் போர்

# சென். ஜோண்ஸ் முன்னிலை

## சவாலை சமாளிக்குமா? யாழ். மத்தி




(யாழ்ப்பாணம்)

வடக்கின் போர் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 239 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

சென். ஜோண்ஸ் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலான 109ஆவது வடக்கின் போர் மூன்று நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக விக்கெட் இழப்பின்றி 9 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை யாழ். மத்திய கல்லூரி அணி தொடர்ந்தது. யாழ். மத்திய கல்லூரி ஆரம்ப விக்கெட்டுக்களை விரைவாக இழந்தபோதிலும் அலன்ராஜ், கௌதமன், கார்த்தீபன் ஆகியோர் சென். ஜோண்ஸ் கல்லூரியின் பந்து வீச்சை தாக்குப் பிடித்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்க முற்பட்டனர். குறிப்பாக, சென். ஜோண்ஸ் கல்லூரியின் சுழற்பந்து வீச்சாளர் லோகதீஸ்வரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய யாழ். மத்திய கல்லூரி அணி ஒரு கட்டத்தில் 100 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ளுமா என்ற சந்தேகம் அதன் இரசிகர்களிடையே மேலெழுந்தது. இந்த ஏக்கத்தை முறியடித்த அலன்ராஜ், கௌதமன் அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்க துணை புரிந்தனர். இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக, 80.4 ஓவர்களை எதிர்கொண்டு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அலன்ராஜ், கௌதமன் ஆகியோர் தலா 41, கார்த்தீபன் 23, திரேசன் 16, கோமோதரன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லோகதீஸ்வர் 73 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு, டிசாந்துஜன் ஐந்து ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, துவாரகசீலன் 14 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு, வாதுசன் 35 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

136 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி முதலிரு விக்கெட்டுக்களை வேகமாக பறிகொடுத்தபோதிலும் ஓட்டங்களை வேகமாகச் சேகரிக்க முற்பட்டது. இதன் காரணமாக சென். ஜோண்ஸ் கல்லூரி அணியின் விக்கெட்டுக்கள் சீரான இடைவெளியில் வீழ்த்தப்பட்டபோதிலும் அதே வேகத்தில் ஓட்டங்களும் குவிக்கப்பட்டன. இந்நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை சென். ஜோண்ஸ் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக ஆறு விக்கெட்டுக்களை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கானாமிர்தன் 27, சிந்துஜன் 25, பிளமிங் 13, டிசாந்துஜன் ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கௌதமன் 30 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு, மதுஷன் 20 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு, திரேசன் 25 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இந்நிலையில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 239 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளதுடன் பலமான நிலையை அடைந்துள்ளது. இன்றைய இறுதி நாளில் யாழ். மத்திய கல்லூரி அணி நெருக்கடியை தவிர்த்து போட்டியைச் சமப்படுத்தவோ அல்லது வெற்றிபெறவோ முயற்சிக்க பெரும் போராட்டத்தை நடாத்தவேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சென். ஜோண்ஸ் முதல் இனிங்ஸ் 300/7

(42)



# போட்டுத் தாக்கியது டோனி படை

## தொடரிருந்து வெளியேறும் அபாய நிலையில் தீவுகள்

(பேர்த்)

மொகமட் சமி, டோனி ஆகியோரின் பொறுப்பான செயற்பாட்டின் மூலம் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான பரபரப்பான போட்டியில் இந்திய அணி நான்கு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

11ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நியூசிலாந்து, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகின்றது.

ஏ பிரிவுக்கான ஆட்டமொன்றில் மேற்கிந்தியத்தீவுகள், இந்திய அணிகள் நேற்று மோதின. அவுஸ்ரேலியாவின் பேர்த்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு ஆரம்பம் முதலே அதிர்ச்சி அளிக்கும் வகையில் இந்திய அணியின் பந்து வீச்சு அமைந்திருந்தது. முதல் விக்கெட்டை எட்டு ஓட்டங்களுக்குள் பறிகொடுத்த மேற்கிந்தியத்தீவுகள் அணி, தொடர்ந்து சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களை வேகமாகப் பறிகொடுத்தது. நட்சத்திர வீரர் கிறிஸ் கெய்ல், சாமுவேல்ஸ், ரசல் என அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறியதுடன் அணியையும் நெருக்கடிக்குள் தள்ளினர். இந்நிலையில் எட்டாவது விக்கெட்டுக்காக இணைந்த டரன் சமி கப்டன் கோல்டருடன் பொறுப்பாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்க துணைபுரிந்தார். மறுபுறம் கப்டன் கோல்டர் அரைச்சதம் கடந்து அசத்தினார். இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 44.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கோல்டர் நான்கு பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 57, டரன் சமி 26, கிறிஸ் கெய்ல், காட்டர் ஆகியோர் தலா 21, ரெய்லர் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மொகமட் சமி மூன்று, உமேஷ் யாதவ், ஜடேஜா ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 183 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி முதலிரு விக்கெட்டுக்களையும் விரைவாகப் பறிகொடுத்தது. இந்நிலையில் வந்தவேகத்திலேயே அதிரடியில் கலக்கிய ஹோலி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார். ஹோலியின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து இந்திய அணியின் விக்கெட்டுக்கள் வேகமாகச் சாய்க்கப்பட்டது. இந்நிலையில் கப்டன் டோனி ஒரு முனையில் பொறுப்புடன் ஆடி அணியின் வெற்றியை உறுதி செய்தார். இறுதியில் இந்திய அணி 39.1 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டோனி ஆட்டமிழக்காது 45, ஹோலி 33, ரஹானே 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரெய்லர், ரசல் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக மொகமட் சமி தெரிவு செய்யப்பட்டார். இவ்வெற்றியின் மூலம் இந்திய அணி காலிறுதிப் போட்டிக்கான வாய்ப்பை உறுதி செய்தது.

இதேவேளை ஐந்து போட்டிகளில் ஆடியுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி மூன்றாவது தோல்வியைச் சந்தித்துள்ளது. இந்நிலையில் அடுத்து நடைபெறவுள்ள இரு போட்டிகளிலும் வெற்றிபெறும் பட்சத்திலேயே காலிறுதிப் போட்டிக்கான வாய்ப்பில் தொடர்ந்தும் நீடிக்க முடியும். இல்லையேல் தொடரிலிருந்து வெளியேறும் அபாய நிலையை அது எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பி பிரிவில் பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகள் காலிறுதி வாய்ப்பை உறுதி செய் துள்ள அதேவேளை, பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவுகள் மற்றும் அயர்லாந்து அணிகளுக்கிடையே கடும் போட்டி நிலவும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

### ஒரே பார்வையில் போட்டி முடிவு

**மேற்கிந்தியத்தீவுகள் 182/10 (44.2)**

| | | | |
|---|---|---|---|
| கோல்டர் | 57 (64) | மொகமட் சமி | 3/35 |
| டரன் சமி | 26 (55) | உமேஷ் யாதவ் | 2/42 |
| கிறிஸ் கெய்ல் | 21 (27) | ஜடேஜா | 2/27 |
| காட்டர் | 21 (43) | அஸ்வின் | 1/38 |

**இந்தியா185/06 (39.1)**

| | | | |
|---|---|---|---|
| டோனி | 45* (56) | ரெய்லர் | 2/33 |
| ஹோலி | 33 (36) | ரசல் | 2/45 |
| ரஹானே | 22 (25) | ரோச் | 1/44 |
| அஸ்வின் | 16* (32) | ஸ்மித் | 1/22 |

நான்கு விக்கெட்டுக்களால் இந்தியா வெற்றி. ஆட்டநாயகன் : சமி

# ஐ.பி.எல். நிராகரித்தோர் உலகக் கிண்ணத்தில் அசத்தல்




உலகக்கிண்ணத் தொடரில் அசத்தி வரும் முன்னணி வீரர்கள் நடைபெறவுள்ள ஐ.பி.எல் தொடரில் கழற்றிவிடப்பட்டுள்ளனர்.

அதன் படி, தென் ஆபிரிக்காவின் அதிரடி வீரர் ஆம்லா நடப்பு உலகக்கிண்ணத் தொடரில் சிறப்பாக விளையாடி வருகிறார். இவர் இதுவரை 4 போட்டிகளில் விளையாடி 257 ஓட்டங்களை குவித்துள்ளார். இவரும் மேக்ஸ்வெல், டிவில்லியர்ஸ் போன்று அதிரடி காட்டும் வீரர் தான். ஆனால் ஐ.பி.எல் தொடரில் எந்த அணியும் இவரை வாங்க முன்வரவில்லை.

அடுத்து இலங்கை அணியின் நட்சத்திர ஆட்டக்காரர்களான டில்ஷான் மற்றும் சங்கக்காரா ஆகியோரையும் இந்த ஐ.பி.எல் தொடரில் கண்டுகொள்ளவில்லை. ஆனால் இவர்கள் தங்கள் அணிக்காக துடிப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். சங்கக்காரா 4 போட்டிகளில் விளையாடி 268 ஓட்டங்களையும், டில்ஷான் 229 ஓட்டங்களையும் குவித்துள்ளனர்.

மேற்கிந்திய தீவுகளின் அதிரடி வீரர் சாமுவேல்ஸும் கழற்றிவிடப்பட்டுள்ளார். இவர் அந்த அணியில் கிறிஸ் கெய்லுக்கு அடுத்தபடியாக அதிக ஓட்டங்கள் குவித்துள்ளார். 4 போட்டிகளில் விளையாடி 192 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

## உலகக் கிண்ணம் 2015

### இன்றைய ஆட்டம்

பாகிஸ்தான்
எதிர்
தென்னாபிரிக்கா
இடம்– ஒக்லாந்து
நேரம்– காலை 06.30

அயர்லாந்து
எதிர்
சிம்பாப்வே
இடம்– ஹோபர்ட்
நேரம்– காலை 09.00

### நாளைய ஆட்டம்

அவுஸ்ரேலியா
எதிர்
இலங்கை
இடம்– சிட்னி
நேரம்– காலை 09.00

நியூசிலாந்து
எதிர்
பாகிஸ்தான்
இடம்– நேப்பியர்
நேரம்– காலை 03.30

## இலங்கை அணி தீவிர பயிற்சி



உலகக்கிண்ண தொடரில் பலம் வாய்ந்த அவுஸ்திரேலிய அணியை எதிர்கொள்ளவிருக்கும் இலங்கை அணி அதற்கான தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளது.

தொடக்க போட்டியில் நியூசிலாந்திடம் தோல்வியை தழுவினாலும், ஆப்கானிஸ்தான், பங்ளாதேஷ், இங்கிலாந்து ஆகிய அணிகளை வீழ்த்தி இலங்கை அணி அடுத்தடுத்த வெற்றிகளை பெற்றுள்ளது.

இந் நிலையில் நாளை சிட்னியில் உலகக்கிண் ணத் தொடரில் ஆதிக்கம் செலுத்தி வரும் அவுஸ்திரேலிய அணியுடன் இலங்கை அணி மோதவுள்ளது.

இதனையடுத்து இலங்கை வீரர்கள் தீவிர பயிற்சியில் களமிறங்கியுள்ளனர். ஏ பிரிவில் இடம்பெற்றுள்ள இலங்கை அணி 6 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தில் இருக்கிறது.

## அவுஸ்ரேலியாவை வீழ்த்தினால் இலங்கையின் தன்னம்பிக்கை அதிகரிக்கும்

### சனத் ஜெயசூரியா



உலகக்கிண்ணத் தொடரில் அவுஸ்ரேலியாவை வீழ்த்தினால் இலங்கை அணியின் தன்னம்பிக்கை அதிகரிக்கும் என்று இலங்கை அணியின் தெரிவு குழுத் தலைவர் சனத் ஜெயசூரியா தெரிவித்துள்ளார்.

நாளை சிட்னியில் நடக்கும் போட்டியில் இலங்கை அணி, அவுஸ்ரேலியாவை எதிர்கொள்கிறது.

இது தொடர்பாக இலங்கை அணியின் தெரிவு குழுத் தலைவர் சனத் ஜெயசூரியா கருத்து தெரிவிக்கையில், அவுஸ்ரேலியாவுடனான மோதல் மிக முக்கியமானது. அந்த அணியை வீழ்த்தும் பட்சத்தில் இலங்கை வீரர்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

இலங்கை அணியின் நல்ல மாற்றம் தெரிகிறது. பங்களாதேஷிற்கு எதிரான போட்டியில் சங்கக்காரா, டில்ஷானும், இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் டில்ஷான், திரிமன்னேவும் ஜோடி சேர்ந்து சிறப்பாக விளையாடினர்.

இலங்கை அணியின் துடுப்பாட்டம் வலுவாக இருக்கிறது. அதேபோல பந்துவீச்சில் மலிங்க, திசர பெரேரா அசத்த தொடங்கியுள்ளனர். நாங்கள் சரியான பாதையை நோக்கி பயணிக்கிறோம் என்று கூறியுள்ளார்.

# எனக்கு எதுவும் தெரியாது



விராட்ஹோலி விவகாரம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என இந்திய சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் தெரிவித்துள்ளார். எங்களுக்கு ஆதரவு அளிக்க மிகப் பெரிய எண்ணிக்கையிலான ஊடகவியலாளர்கள் வந்திருப்பது எங்களை நெகிழ வைக்கிறது. கிரிக்கெட் குறித்த தகவல்களை சரியான முறையில் மக்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டியது ஊடகத்தின் கடமையாகும்.

உண்மையிலேயே விராட்ஹோலி பிரச்சினையில் என்ன நடந்தது என்பது எனக்கு தெரியாது. நிச்சயமாக அது எனது எல்லைக்குட்பட்ட விவகாரம் கிடையாது.

நடந்தது என்ன என்பது தெரியாமல் அது குறித்து நான் எப்படி கருத்து கூற முடியும். நடந்த சம்பவத்தை விடுத்து, அடுத்து நடக்க போகும் போட்டி குறித்து அனைவரும் பார்ப்போம் என அஸ்வின் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் துணை தலைவர் விராட்ஹோலி, இரண்டு நாட்களுக்கு முன்பு அவுஸ்ரேலியாவின் பேர்த் நகரில் பயிற்சியில் ஈடுபட்டுவிட்டு திரும்புகையில் அங்கு இருந்த ஆங்கில நாளிதழின் நிருபரை பார்த்து திடீரென கண்டபடி தகாத வார்த்தையால் வசைபாடினார்.

விராட்ஹோலியின் காதலியான இந்தி நடிகை அனுஷ்கா சர்மா குறித்து அந்த ஆங்கில பத்திரிகையில் வெளியான கட்டுரையை சம்பந்தப்பட்ட நிருபர் தான் எழுதினார் என்று கருதி விராட்ஹோலி நிதானம் இழந்து இவ்வாறு நடந்துள்ளார்.

ஆனால் கட்டுரைக்கும், வசைமொழிக்குள்ளான நிருபருக்கும் சம்பந்தம் இல்லை என்பது பின்னர் தெரியவந்ததும் விராட்ஹோலி, நடந்த சம்பவத்துக்காக வேறு நிருபர் மூலம் வருத்தம் தெரிவித்தார். ஆனாலும் அந்த பரச்சினை ஓய்ந்து விடாமல் விஸ்வரூபம் எடுதது வருவது குறிப்பிடத்தக்கது.



காரைநகர் தோப்புக்காடு மறைஞானசம்பந்த வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு அண்மையில் பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் திருமதி ம.தேவராசா தலைமையில் நடைபெற்றது. காரைநகர் பிரதேச ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அமைப்பாளரும். பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவருமான வீ.கண்ணன் கலந்து சிறப்பித்து மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

## கருணாரத்னவிற்கு பதிலாக குசல் ஜனித் பெரேரா



இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரர் திமுது கருணாரத்ன பயிற்சியின் போது காயத்திற்கு உள்ளாகியுள்ளார்.

இந்த நிலையில், திமுது கருணாரத்னவிற்கு பதிலாக குசல் ஜனித் பெரேராவை அவுஸ்ரேலியாவிற்கு அனுப்ப தயார் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் பேரவையின், தொழில்நுட்ப சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய அரசாங்கமா? அது என்ன? எதற்கு?

எம்.எஸ்.எம். ஐயூப் கட்டுரையிலிருந்து.

புதிய அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத்திட்டம் தொடர்பாக மக்களிடையே ஓரளவுக்காவது நம்பிக்கை இருந்திருந்தால் அது படிப்படியாகவும் வேகமாகவும் அற்றுப்போவதை இப்போது அவதானிக்க முடிகிறது.

ஆனால், சுதந்திரத்துக்குப் பின்னர் பதவிக்கு வந்த சகல அரசாங்கங்களும் வாக்குறுதிகளை மீறியிருப்பதனால் தற்போதைய அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை அற்றுப்போவதைப் பற்றி மக்கள் அவ்வளவாக அலட்டிக்கொள்ளவும் இல்லை.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்களித்த மக்கள் வெறுப்படைந்து இருப்பதாகவும் தெரியவில்லை. ஏமாந்து பழகியிருப்பதே அதற்குக் காரணமாக இருக்க வேண்டும். 100 நாட்கள் வேலைத்திட்டத்திலிருந்த வாக்குறுதிகளைப் பற்றி இப்போது அரசியல்வாதிகள் மட்டுமே பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களது கவனமும் இப்போது தேசிய அரசாங்கம் என்ற விடயத்தின்பால் திரும்பியிருக்கிறது. கடந்த வாரம் ஜனாதிபதி தலைமையில் கட்டுநாயக்கவில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக நடைபெற்ற செயலமர்வொன்றின் போது ஜனாதிபதி தெரிவித்த கருத்தொன்றை அடுத்தே தேசிய அரசாங்கம் தொடர்பான இந்த விவாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சு.க உறுப்பினர்கள் சிலருக்கும் அமைச்சுப் பதவிகளை வழங்கி தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்க தாம் உத்தேசித்துள்ளதாக ஜனாதிபதி அந்த செயலமர்வின் போது கூறியதாக கூறப்படுகிறது. அதாவது தேசிய அரசாங்கம் என்று கூறப்பட்ட போதிலும் அது உண்மையிலேயே ஐக்கிய தேசிய கட்சியும் சு.க.வும் இணைந்து உருவாக்கும் தேசிய அரசாங்கமாகவே இருக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை வரவேற்பதைப் போல் கருத்து தெரிவித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. தேசிய அரசாங்கத்தின் கீழ் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்ற நம்பிக்கையை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஓரிரு நாட்களுக்கு முன்னர் தெரிவித்து இருந்தார்.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இதற்கு முன்னர் பலமுறை சர்வகட்சி அரசாங்கம் ஒன்றைப் பற்றி கருத்து வெளியிட்டு இருந்தார். சிலவேளை ஜனாதிபதியின் தேசிய அரசாங்கம் என்ற கருத்தை ஐ.தே.க வரவேற்கிறதாகத்தான் இருக்க வேண்டும். அல்லது ஐ.தே.க.வின் கருத்தையே ஜனாதிபதி வெளியிட்டு இருக்கிறார் போலும்.

ஏனெனில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சு.க.வின் தலைவராக இருந்த போதிலும் அவரது கருத்துக்கள் அனேகமாக சு.க.வின் கருத்துக்களை விட ஐ.தே.க. தலைவரின் கருத்துக்களை ஒத்தே இருக்கின்றன.

இரு பிரதான கட்சிகள் அல்லது இரு பெரிய கட்சிகள் ஒன்று சேர்ந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்தால், சிறு கட்சிகளினது பேரம் பேசும் சக்தி முற்றாகவே அற்றுப்போகும்.

அக்கட்சிகளுக்கு அரசியல் முக்கியத்துவம் கிடைக்க வேண்டுமானால் நிச்சயமாக பிரதான இரு கட்சிகளும் மோதிக்கொள்ள வேண்டும். அதே வேளை, அவ்விரு கட்சிகளும் சம பலத்துடன் இருக்க வேண்டும். அப்போது தான் பிரதான கட்சிகள் சிறு கட்சிகளின் உதவியை நாடும். ஆனால், தேசிய அரசாங்கம் அந்த நிலை[illegible] இல்லாமல் செய்துவிடும்.

# கே.வி. மகாதேவன்

60

- பி.ஜி.எஸ்.மணியன் -

தேவரின் "நல்ல நேரம்" படத்தில் பாடல்களை கண்ணதாசன், புலமைப்பித்தன், அவிநாசிமணி ஆகியோர் எழுதி இருந்தனர்.

ஆனால் ரீ-மேக் படம் என்பதால் தேவர் அதிகம் இசைக்காக மினக்கெடவில்லை. டைட்டில் இசைக்கு "ஹாத்தி மேரே சாத்தி" படத்தின் இசையே பயன்படுத்தப்பட்டது.

அதே நேரம் பாடல்களுக்கான இசையில் மகாதேவன் தன் தனித்தன்மையை காட்டி இருக்கிறார்.

"ஆகட்டும்டா தம்பிராஜா. நடராஜா" என்ற பாடல் அதன் மூலப் பாடலான "சல்சல் மேரே ஹாத்தி" பாடலிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தது. "ஓடி ஓடி உழைக்கணும்" என்ற டி.எம்.எஸ். பாடலும் அதுபோலவே.

"டிக் டிக் டிக் டிக்" பாடலின் துவக்கம் ஹிந்திப் பாடலின் மெட்டில் இருந்தாலும் தொடரும் சரணங்கள் மகாதேவனின் இசையில் முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் அமைந்திருக்கிறது.

எம்.ஜி.ஆருக்கும் சோகக் காட்சிகளுக்கும் உள்ள பொருத்தம் அனைவருக்கும் தெரிந்தது தான். நடிகர் திலகத்தைப் போல சோகரசத்தை அப்படியே பிழிந்துவிட மாட்டார். அழும் காட்சிகளில் முகத்தை மூடிக்கொண்டுதான் அழுது நடிப்பார். ஆனால், "நல்ல நேரம்" படத்தில் யானையை அடித்துவிட்டு சங்கிலியால் கட்டிப்போட வேண்டிய காட்சியில் எம்.ஜி.ஆரின் நடிப்பு பார்ப்பவர் கண்களைக் கலங்க வைத்தது என்றால் அதற்கு அந்தக் காட்சியில் கே.வி. மகாதேவனின் இசை முக்கிய காரணம்.

"நல்ல நேரம்" ஹிந்திப் படத்தைப் போலவே திரையிட்ட இடங்களில் எல்லாம் வெற்றிவாகை சூடியது.

அதே 1972 ஆம் வருடம் மகாதேவனின் இசையில் நடிகர் திலகத்தின் நடிப்பில் வெளிவந்த மகத்தான வெற்றிப்படம் "வசந்த மாளிகை".

"பிரேம் நகர்" என்ற பெயரில் தெலுங்கில் நாகேஸ்வர ராவ் - வாணிஸ்ரீ நடித்து பெருவெற்றி பெற்ற படம் அதே தயாரிப்பாளர் டி.ராமாநாயுடு அவர்களால் தமிழில் "வசந்தமாளிகை"யாக வெளிவந்தது. "வசந்த மாளிகை" படத்தின் சிறப்பம்சங்களைப் பற்றிச் சொல்வதென்றால் சொல்லிக்கொண்டே போகலாம்.

முதல் முதலாக டூயட் பாடலில் ஸ்லோமோஷன் முறையைப் பயன்படுத்தி பாடல் காட்சி அமைக்கப்பட்ட படம் "வசந்த மாளிகை"தான்.

பொதுவாக நடிகை வாணிஸ்ரீ நடித்தால் அந்தப் படம் சுமாராகத்தான் போகும் என்பது தமிழ்ப் படவுலகில் எழுதப் படாத நம்பிக்கைகளில் ஒன்று. அந்த நம்பிக்கையை தகர்த்து வாணிஸ்ரீ நடித்து தமிழில் வெள்ளிவிழாக் கொண்டாடிய படம்.

இலங்கையில் ஒரு வருடத்துக்கும் மேல் வெற்றிகரமாக ஓடிய படம்.

தெலுங்குப் படத்துக்கு இசை அமைத்த கே.வி. மகாதேவனே தமிழுக்கும் இசை அமைத்தார்.

கண்ணதாசனின் பாடல் வரிகள் காலத்தை வென்று நிற்கின்றன.

"பாடல் வரிகள் எழுதப்பட்ட பிறகுதான் இசை அமைப்பது" என்ற மகாதேவனின் கொள்கை தீவிரமாகக் கடைபிடிக்கப்பட்டிருப்பது பாடல்களைக் கேட்டாலே புரிந்துவிடும்.

விமானத்தில் கதாநாயகன் மதுவின் மயக்கத்தில் பாடும் பாடலோடுதான் படமே துவங்குகிறது.

"ஓ மானிட ஜாதியே" - பாடல் வரிகள் எல்லாமே வசன நடையில் தான். ஆனால் இந்த வசனத்துக்கும் இசை அமைத்து பாடலாக்கி விட்டிருப்பது கே.வி.மகாதேவனின் கை வந்த கலை. இணைப்பிசை எதுவுமே இல்லாமல் ஆரம்பம்முதல் இறுதிவரை ஒரே மூச்சில் அமைந்த பாடல்.



"ஏன். ஏன். ஏன்?... ஒரு கிண்ணத்தை ஏந்துகிறேன்" - டி.எம்.சௌந்தரராஜனுடன்




ஹம்மிங் பாடகியாகவே தமிழ் படவுலகில் வலம் வந்துகொண்டிருந்த வசந்தா இணைந்து பாடிய பாடல்.

"கலைமகள் கைப்பொருளே" - பி. சுசீலாவின் குரலில் இனிமையும் சோகமும் பொங்கும் பாடல்.

"குடிமகனே" - டி.எம்.எஸ். - எல்.ஆர். ஈஸ்வரியின் இணைவில் இன்னொரு வெற்றிப்பாடல்.

"மயக்கமென்ன இந்த மௌனமென்ன?" - கண்ணதாசன் - கே.வி.மகாதேவன் - டி.எம்.எஸ். - பி. சுசீலா - இவர்களில் யாருடைய திறம் பெரிது என்று புள்ளிகுத்த முடியாத அளவுக்கு கவிதை வரிகளும், இனிமையான மெட்டும், உணர்வு பூர்வமான குரல்வளமும் நிறைந்த பாடல் இது.

இணைப்பிசையில் மகாதேவன் காட்டி இருக்கும் வித்தியாசங்கள் குறிப்பிடத்தக்கவை.

இந்தப் பாடல் காட்சியில் தான் ஸ்லோமோஷன் முறை முதல் முதலாக தமிழ் சினிமாவுக்கு அறிமுகமானது.

பல்லவி முடிந்ததும் வரும் முதல் சரணத்துக்கு கொடுத்திருக்கும் இணைப்பிசைக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் கோரஸ் பாடகியரைப் பயன்படுத்தி இரண்டாவது சரணத்துக்கு இணைப்பிசையை அமைத்திருக்கிறார். மூன்றாவது சரணத்துக்கோ பல்லவி முடிந்ததும் வரும் இணைப்பிசையில் கொஞ்சம், அடுத்த சரணம் முடிந்ததும் வரும் இணைப்பிசையில் கொஞ்சம் என்று எடுத்துக்கொண்டு இரண்டையும் கலந்து கொடுத்திருக்கும் இணைப்பிசை புருவங்களை உயர்த்த வைக்[illegible]து.

"வசந்த மாளிகை" படப்பிடிப்பு நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் நடிகர் திலகத்தின் அன்னையான ராஜாமணி அம்மாள் காலமாகிவிட்டார். தாயின் மரணத்தால் படிப்பிடிப்பு தடைப் பட்டிருந்த நேரம்.

ராஜாமணி அம்மாள் மறைந்த ஐந்தாவது நாள் "வீட்டில் இருந்தால் அம்மாவின் நினைப்பு ரொம்ப கஷ்டமா இருக்கு" என்று கூறி ஷூட்டிங் வந்துவிட்டார் சிவாஜி.

தனது தாயார் மறைந்த சோகத்தை சற்றுக்கூட வெளிக்காட்டிக்கொள்ளாமல் நடிகர் திலகம் நடிக்க அன்று படமாக்கப்பட்ட காட்சி இந்த "மயக்கமென்ன" டூயட் பாடல் காட்சிதான்.

காதலியின் சுயகௌரவ உணர்வு - காதலை பிரிக்கிறது.

பிரிந்த பிறகு சோக உணர்வுக்காக பாடல்.. "இரண்டு மனம் வேண்டும் இறைவனிடம் கேட்டேன்".

இந்தப் பாடலில் கடைசி சரணத்தில் கண்ணதாசன் இப்படி எழுதினார்:

"கண்களின் தண்டனை காட்சி வழி
காட்சியின் தண்டனை காதல் வழி
காதலின் தண்டனை கடவுள் வழி" - என்று

மூன்று வரிகளை எழுதியவர் நான்காவது வரிக்காக யோசித்துக்கொண்டிருந்த போது - அனைவருக்கும் நிறைவான வரி வரவே இல்லை.

அப்போது கே.வி.மகாதேவனின் உதவியாளர் புகழேந்தி "கடவுளை தண்டிக்க என்ன வழி" என்று தயக்கத்துடன் கூற, அவரை அப்படியே கட்டித் தழுவிக்கொண்டார் கவியரசர்.

படத்தின் உச்சகட்ட காட்சிக்கான பாடல் "யாருக்காக" - இன்றளவும் பல திரைப்படங்களில் காமெடிக்காக கையாளப்பட்ட கொடுமையைச் சந்தித்திருக்கும் பாடல்.

உச்ச கட்ட காட்சிக்கான விறுவிறுப்பை பாடலிலும் இணைப்பிசையிலும் வயலின்களைப் பயன்படுத்தி கே.வி.மகாதேவன் ஏற்படுத்தி இருக்கும் அற்புதலாகவம் படத்தை மாபெரும் வெற்றியடையச் செய்தது.

(தொட[illegible]

தேசிய அரசாங்கம் உருவானாலும் இல்லா விட்டாலும் தமிழ்த் தேசிய கூட்டமைபபு அரசாங்கத்தோடு சேரப்போவதில்லை. கூட்டமைப்பின் தலைவர்கள் அமைச்சுப் பதவிகளை விரும்பாமல் இல்லை. ஆனால் புலம்பெயர் தமிழர்கள் அதனை விரும்பமாட்டார்கள். தமிழ் வாக்காளர்களின் உறவினர்கள் என்ற வகையில் புலம்பெயர்ந்தவர்களே அவ்வாக்காளர்களின் மன நிலையை கட்டுப் படுத்துகிறார்கள். எனவே கூட்டமைப்பின் தலைவர்கள் விரும்பினாலும் அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது. எனவே, அவர்களுக்கு தேசிய அரசாங்கம் வந்தாலும் வராவிட்டாலும் ஒன்றே தான்.

இந்த நிலையில் தான் சுமந்திரன் மேற்படி கருத்தை வெளியிட்டு இருக்கிறார். மக்கள் விடுதலை முன்னணி சில காலமாக நாட்டில் பிரபல்யம் அடைந்து வருகிறது. எனவே எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது தமக்கு கூடுதலான ஆசனங்களை பெற்றுக்கொள்ள முடியும் என அக்கட்சி நினைக்கிறது. எனவே அக்கட்சியும் பொதுத் தேர்தலின் போது எந்தவொரு பிரதான கட்சியோடும் கூட்டுச்சேர மாட்டாது என ஊகிக்கலாம்.

எனவே, மக்கள் விடுதலை முன்னணிக்கும் பிரதான இரு கட்சிகள் ஒன்று சேர்ந்து தேசிய அரசாங்கம் அமைத்தாலும் ஒன்று, இல்லாவிட்டாலும் ஒன்று என்ற நிலை தான் இருக்கிறது. இந்த நிலையில் தான் தேசிய அரசாங்கம் அமைத்தால் கடந்த அரசாங்கத்தின் திருடர்களும் ஊழல் பேர்வழிகளும் தண்டிக்கப்படுவார்களா என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க கேள்வியெழுப்பியிருந்தார்.

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டால் நிச்சயமாக ரணில் விக்கிரமசிங்கவே பிரதமராவார். அவ்வாறான நிலைமை இல்லாவிட்டால் ஐ.தே.க. இதனை விரும்பாது.

எல்லாவற்றையும் விட முக்கியமான கேள்வி என்னவென்றால் எதற்காக தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதே. அந்தக் கேள்வி, நிலைமையை மேலும் சிக்கலாக்குகிறது.

# இறந்தும் வாழ்பவர் வேர்ட்ஸ்வொர்த்



இங்கிலாந்தின் கவிகளில் வேர்ட்ஸ்வொர்த்துக்கு முக்கிய இடம் உண்டு. பாரதியைப் போல, ரவீந்திரநாத் தாகூரைப் போல இங்கிலாந்தில் வேர்ட்ஸ்வொர்த்தின் புகழும் அழியாமல் நீடிக்கிறது.

இன்றும் அவர் வசித்த இடத்தை தரிசிப்பதை, கவிதையை இரசிக்கும் உள்ளங்கள் முக்கிய நிகழ்வாக வைத்துள்ளன.

இதனாலோ என்னவோ... இன்றும் "பிரிட்டன் விசிட்டர் சென்டர்" என்ற அமைப்பு; வேர்ட்ஸ்வொர்த் நினைவகத்தை தரிசிக்க விரும்புபவர்களுக்காக ஒரு சிறப்பு சுற்றுலா ஏற்பாடு செய்கிறது... லண்டனிலிருந்து, வேர்ட்ஸ்வொர்த் வசித்த கிராஸ்மியர் (Grasmere)க்கு அவர்களை அழைத்துச் செல்கிறது.

அவருடைய நினைவகத்தைப் பார்க்க மாலை 5 மணிக்கு மேல் அனுமதி கிடையாது. ஆக, காலையில் சென்று பார்க்க வசதியாய் இரவு கிராஸ்மியரில் ஓர் இருப்பிடத்தில் தங்கவைத்து விடுகிறது. இந்த இருப்பிடத்தின் பெயர் "டீ ரூ டீ" (Bed and Breakfast)

அடுத்தநாள் காலை அனைவரையும் "Dove Cottage" அழைத்துச் செல்கின்றனர். 19ஆம் நூற்றாண்டில் வேர்ட்ஸ்வொர்த் வசித்த வீடு இது. இங்கு சகோதரி டோரதி, மனைவி மேரி, குழந்தைகள் வசித்துள்ளனர். வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் 1850 இல் இறந்த அடுத்த 10 ஆண்டுகளில் அவருடைய சகோதரி மற்றும் மனைவி மேரி ஆகியோர் இறந்தனர்.

வேர்ட்ஸ்வொர்த்... ஆரம்பகாலத்தில் தெய்வ நம்பிக்கை இல்லாமல் இருந்தார். ஆனால் பின்னாளில் பக்திமானாகி, அடிக்கடி அந்த ஊரில் உள்ள சென் ஒஸ்வோல்ட் தேவாலயத்துக்குச் செல்ல ஆரம்பித்தார்.

அது சிறிய தேவாலயம். அதனுள்ளேயே வேர்ட்ஸ்வொர்த்தை அங்கீகரிக்கும் விதமாக நினைவுச்சின்னம் எழுப்பியுள்ளனர். அங்கு இரசிகர்கள் கூடி அமைதியாகப் பிரார்த்திக்கின்றனர். அருகிலேயே ரோதே நதி ஓடுகிறது.

இந்த இடத்தில் வேர்ட்ஸ்வொர்த் எழுதிய பிரபலமான பாடல், daffodils (மஞ்சள் மலர் தரும் ஒரு தாவரம்) பிரிண்ட் செய்து தருகின்றனர்.

# 25 ஆண்டுகளை முடித்த போட்டோஷொப்!

1990 ஆம் ஆண்டு, பெப்ரவரி 19 அன்று, அடோப் போட்டோஷொப் வெளியானது. கம்ப்யூட்டரின் உதவியோடு, யாரும் ஒரு




போட்டோவினை எடிட் செய்திடவும், சிறப்பாக மாற்றி அமைக்கவும், மொத்தமாக வேறு ஒன்றாக அமைக்கவும் மற்றும் பலவகையான மாற்றங்களை மேற்கொள்ளவும் வழி தரும் ஒரு சிறந்த புரோகிராமாக போட்டோ ஷொப் அறிமுகமானது.

இன்று நாம் அனைவருமே, போட்டோ ஒன்றில் கை வைத்து, அதன் அளவை மாற்றுவது, ஒளி அமைப்பை மாற்றுவது மற்றும் சின்னச் சின்ன மாற்றங்களிலிருந்து, பெரிய அளவிலான மாற்றங்கள் வரை மேற்கொள்ள முடிகிறது என்றால், அதற்கு அடோப் போட்டோ ஷொப் தந்த தைரியம் எனக் கூடச் சொல்லலாம்.

இன்று இந்த மாற்றங்களை மேற்கொள்வது எளிதாக இருக்கலாம். ஆனால், 1990 ஆம் ஆண்டு, போட்டோ ஒன்றை மாற்றி அமைக்க முடியுமா என்பதே ஒரு பெரிய கேள்விக் குறியாக இருந்தது. அப்போது, பழைய வகையில் பிலிம் போட்டுத்தான் போட்டோக்கள் எடுக்கப்பட்டன. நுகர்வோர்கள் அனைவரும் பயன்படுத்தும் டிஜிட்டல் கமரா 1994இற்குப் பின்னரே வெளிவந்தது. இலங்கைக்கு அவை வர மேலும் சில ஆண்டுகள் ஆயின.

பின் நாளில், கிராபிக்ஸ், மெமரி மற்றும் பெர்சனல் கம்ப்யூட்டர்களின் ஸ்டோரேஜ் திறன் அதிகரிக்கையில், போட்டோ எடிட்டிங் என்பதை அனைவரும் மேற்கொள்ளலாம் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

போட்டோஷொப் தன்னுடைய முதல் மூச்சுக் காற்றினை 1987இல் மேற்கொண்டது. தோமஸ் நோல் (Thomas Knoll) இதற்கான விதையைக் கண்டறிந்து மேம்படுத்தினார். அவர் ஓர் ஆய்வு மாணவராகச் செயற்பட்ட போது, அவருக்கு போட்டோ ஷொப்பிற்கான எண்ணம் உதித்தது. அதனைத் தன் சகோதரரின் தூண்டுதலுடன் மேம்படுத்தி வடிவமைத்து, கம்ப்யூட்டர் புரோகிராமாக உருவாக்கினார்.

முதலில் இந்த புரோகிராம் PhotoShop என்றே (Shop என்பது தனிச் சொல்லாக S பெரிய எழுத்தில் இருப்பதைக் கவனிக்கவும்) அழைக்கப்பட்டது.

பின்னர், ஜோன் நோல், இந்த புரோகிராமினை அப்பிள் மற்றும் அடோப் நிறுவனங்களிடம் காட்டினார். அடோப் இதற்கு உரிமம் வழங்கி, விநியோகிக்க ஒத்துக் கொண்டது.

அடோப் நிறுவனம், விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தில் இயங்கும் வகையில், போட்டோஷொப் புரோகிராமினை 1993 ஆம் ஆண்டு கொண்டு வந்தது. "படங்களை உருவாக்குபவர்களுக்கு வலிமையான ஆயுதம் இது" என்ற புகழைப் பெற்றது. படங்களை எடிட் செய்வதில் போட்டோஷொப் புதிய சந்தையை உருவாக்கியுள்ளது என்று பல பத்திரிகைகள் பாராட்டின.

தொடர்ந்து வந்த ஆண்டுகளில், போட்டோஷொப் பல புதிய நவீன தொழில் நுட்ப வசதிகளைத் தன் புரோகிராமில் சேர்த்தது. அவை எல்லாம் இப்போது சாதாரணமாக எவரும் பயன்படுத்தும் வகையில் அமைந்த அம்சங்களாக மாறிவிட்டன. பலருக்கு வேலைவாய்ப்பு தந்த இந்த புரோகிராம் தந்தவர்களுக்கு இந்நாளில் நாம் நன்றி செலுத்தலாம்.

# இலங்கையில் அவர் பெயர் பி.ஜே.பிள்ளை



1939 இல் ஜனசக்தி இதழில், "என்று சுதந்திரம் வருமோ, இந்தியர் துயரங்கள் அறுமோ..." என்று இந்திய சுதந்திரம் வேண்டி எழுதினார் பா.ஜீவானந்தம். அந்த சுதந்திரம், ஆகஸ்ட் 15, 1947இல் வந்தடைந்தது. "வீழ்ந்தது யூனியன் ஜாக் உயர்ந்தது மூவர்ணக் கொடி..." என்று, சுதந்திரத்தை வாழ்த்தினார் ஜீவா.

இந்திய சுதந்திர நாள் வரை, தலைமறைவு வாழ்க்கை தான் வாழ்ந்து வந்தார் ஜீவா. காரணம், ஆங்கிலேயே அரசு, 1946இல், மதுரை பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்டத்தின்போது, கம்யூனிஸ்ட்கள் வன்முறைக்கு திட்டமிட்டதாக குற்றம் சாட்டியது.

ஆங்கிலேய மில் முதலாளிகளும், அதிகாரிகளும் இணைந்து கம்யூனிஸ்ட்களை அடக்கத் திட்டமிட்டு அவர்கள் மீது, சதி வழக்கு தொடரப்பட்டு, பல தலைவர்களும், தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர். அப்போது, சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் அமைச்சரவை ஆட்சி. கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவுப்படி, ஜீவா, கல்யாணசுந்தரம், சீனிவாசராவ் ஆகியோர் தலைமறைவாயினர். ஜீவா, 1946 நவம்பர் முதல், ஆகஸ்ட் 15, 1947 வரை தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டார்.

அதன்பின், கோல்கட்டாவில், 1948 பெப்ரவரியில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின், இரண்டாவது அகில இந்திய மாநாடு நடந்தது. அதில், சோஷலிச சமுதாயம் அமைக்க, இந்திய அரசை எதிர்த்து ஆயுதப் புரட்சியில் இறங்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனால், இந்திய அரசு கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்து, முக்கியமானவர்களை எல்லாம் கைது செய்தது.

ஜீவா தலைமறைவாகி, பி.ஜே. பிள்ளை என்ற பெயரில், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் விக்கிரமசிங்காவுடன் கொழும்பு சென்றார். இலங்கையிலும், கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சிக்கு பாடுபட்டார். அங்கிருந்து, 1949இல் தாய் நாட்டிற்குத் திரும்பினார். உடனே கைது செய்யப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்தியாவில், புதிய அரசியல் அமைப்புச் சட்டம், ஜன., 26, 1952இம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது. கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (ஏ.ஐ.டி.யூ.சி.,) மீது விதிக்கப்பட்டிருந்த தடை செல்லாது என, உச்சநீதிமன்றம் அறிவித்தது. இந்த தீர்ப்பின் அடிப்படையில், இந்திய அரசு கம்யூனிஸ்ட் கட்சி மீதான தடையை நீக்கியது. ஜீவா உள்ளிட்டோர் விடுதலையாயினர்.

(ஆர்.சி.சம்பத் எழுதிய, 'செயல்வீரர் ஜீவா' நூலிலிருந்து)

# புதிர்ப்போட்டி இல. 30

**பின்வரும் எண்தொடர்கள் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட ஒரு விதியை ஆதாரமாகக் கொண்டமைந்தவை. அதே விதியைப் பின் பற்றி ஒவ்வோர் எண் தொடரிலும் கீறிட்ட இடத்தில் வரவேண்டிய எண்களை எழுதுக.**

01. 4, 3, 9, 9, 16, 27, 25, ......
02. 6, 8, 10, 11, 14, 14, ......
03. 8, 15, 28, 53, ......
04. 11/5, 9/6, 7/8, 5/11, ........
05. 10.5, 7, 3.5, 0, ........
06. 9, 7, 63, 9, 5, 45, 9, ....
07. 1680, 1680, 560, 112, ......
08. 16, 14, 13, 10, 9, 5, ....
09. 8, 4, 15, 13, 23, 23, 32, ...
10. 1/1, 2/8, 3/27, 5/125, 5/125, 8/512, ....
11. 567, 576, 657, 756, 765, ......
12. 5, 6, 1, 10, 12, 2, 15, 18, .....
13. (4.3)13, (3.4)19, (5.5) ......
14. (3,6)27, (3.4)7, (3,8)......

**கீழ்வரும் ஆங்கில நெடுங்கணக்கு வரிசைகளுக்கு இடையேயான தொடர்பினை மனதில்க் கொண்டு அடுத்து வரவேண்டிய எழுத்தினை எழுதுக**

15. A, C, E, G, I, K, ...........
16. (B, C, F) (B, D, H) (B, F, .....)
17. Y, Q, L, I, H, I, L, Q .....
18. B, B, C, B, C, D, B, C, D, E, B, C, D, E, ......
19. A, F, K, P, B, G, L, Q, C, H, M, ...
20. D, T, H, X, L, B, P, F, T, .......
21. E, H, K, N, Q, .........

**வினாக்குறியுள்ள இடங்களில் பொருத்தமான எண் களை இடுவதன் மூலம் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

22.



23.



24.



25.



26.




அனுப்பவேண்டிய முகவரி
புதிர்ப்போட்டி இல: -------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


**கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள ஐந்து சொற்களில் ஒரு சொல் ஏனையவற்றிலிருந்து ஏதோ ஒரு இயல்பில் வேறுபடுகின்றது. ஒவ்வொரு வினாவிலும் அவ்வாறு பொருத்தமற்றுக் காணப்படும்சொல்லின் கீழ் கீறிடுக**

27. அலுமாரி, அலுப்பாந்தி, துப்பாக்கி, ஏக்கர், விறாந்தை
28. இலாச்சி, உலாந்தா, கந்தோர், தோம்பு, சிமெந்து
29. கோப்பி, கொக்கோ, ஆலயம், சினிமா, பொலிஸ்
30. கொலை, களவு, சூது, கள், பொய்
31. வீடு, அறம், பொருள், இன்பம், புறம்
32. நிலம், நீர், வளி, சந்திரன், ஆகாயம்
33. பால், தயிர், நெய், மத்து, மோர்
34. வேலணை, புங்குடுதீவு, கிளிநொச்சி, சிசிலி, போகலாந்து
35. ஈழமுரசு, ஈழநாடு, தினகரன், வீரகேசரி, மல்லிகை
36. மருத்துவர், வைத்தியசாலை, மருந்தாளர், தாதி, வைத்தியர்

**கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐவைந்து சொற்கள் உள்ளன. இச்சொற்களைப் பொருத்தமான ஒருமுறையில் ஒழுங்குபடுத்தும் போது நடுவில் வரும் சொல்லின் கீழ் கீறிடுக**

36. தசாப்தம், வைரவிழா, வெள்ளிவிழா, பொன்விழா, நூற்றாண்டு
37. யார், அடி, அங்குலம், மீற்றர், சதமமீற்றர்
38. நிறைபோட்டி, தனியுரிமை, சிலர்உரிமை, இருவர்உரிமை, மூவர்உரிமை
39. பனை, கமுகு, வாழை, மிளகாய், கத்தரி
40. மாதுளம்பழம், பனம்பழம், மாம்பழம், தோடம்பழம், வேப்பம்பழம்
41. பஞ்சு, துணி, சட்டை, பருத்தி, நூல்
42. அப்பா, தம்பி, அண்ணன், தங்கை, அம்மா
43. மீற்றர், டெக்காமீற்றர், டெசிமீற்றர், மில்லிமீற்றர், சென்ரிமீற்றர்
44. கிலோகிராம், அவுன்ஸ், இறாத்தல், கிராம், தொன்

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தொடர்புபட்ட ஒரு சோடிச் சொற்களுக்கு கீழ் சில சோடிச் சொற்கள் தரப்பட்டுள்ளன. தொடக்கச் சோடியில் எடுத்துரைக்கப்பட்ட தொடர்பிற்கு மிகவும் பொருத்தமான தொடர்பை எடுத்துரைக்கும் சோடியைத் தேர்ந்தெடுத்து அதனைக் குறிக்கும் எழுத்தை எழுதுக

45. வட்டி : மூலதனம்
   அ) கூலி : சம்பளம்
   ஆ) கூலி : இலாபம்
   இ) வாடகை : நிலம்
   ஈ) இலாபம் : தொழிலாளி
   உ) நாணயம் : மதிப்பு

46. காடு : தாவரவர்க்கம்
   அ) பாடசாலை : கதிரை
   ஆ) வீடு : தளபாடம்
   இ) கிராமம் : கால்நடை
   ஈ) பழத்தோட்டம் : மரங்கள்
   உ) அலுவலகம் : கணக்காளர்

47. பாட்டி : தந்தை
   அ) தந்தை : மகன்
   ஆ) மகன் : மகள்
   இ) மாமன் : மாமி
   ஈ) பாட்டி : தாய்
   உ) பாட்டன் : தந்தை

**இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும். அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு படங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.**

48. இலம்பாடு : வறுமை
   அ) சங்கமம் : சந்தை
   ஆ) நதி : கழிமுகம்
   இ) வறுமை : வறுமைக்கோடு
   ஈ) துன்பம் : புன்கண்
   உ) சிந்தாகுலம் : உறுகண்

# சென்றவார விடைகள்

01) 3 02) 1 03) 2
04) 4 05) புல்லாங்குழல்
06) இரத்தம் 07) உப்பு
08) கத்தரிக்கோல் 09) துடைப்பம் (தும்புத்தடி)
10) ஊதுபத்தி 11) பஞ்சு
12) எலுமிச்சம்பழம் (தேசிக்காய்)
13) விக்கல்
14) 11மணி நேரம் = 2மணி நேரம் + 1மணி
15) கால்தடங்கள் 16) சோப்
17) ஒரு முறைகள் (அதற்குப் பிறகு அது இரு பதாகிவிடுமே) 18) நினைவுகள்
19) பயம் 20) பொம்மை
21) கடிகாரம் 22) வரைபடம்
23) புத்தகம்
24) அந்த ராஜா குகையில் உள்ள வெளிப்புற சுவற்றில் விலங்குகள், பறவைகள், மனிதர்கள் ஆகியோரின் உறுப்புக்களை பலவாறாக வரைந்து வைத்திருப்பதை வாசித்துப் பார்த்த தமிழ் புலமை பெற்ற இளவரசன், குகையின் வாசலில் எழுதப்பட்டிருந்த வாகசத்தை கவனித்தானாம் அதில் "நான் குகை என்னை தொடு" என்றிருந்தை " நான்கு கை என்னை தொடு" என்று பொருள்பட வாசித்துப் பார்த்து குகையில் அப்படிப்பட்ட படம் இருக்கிறதா என கண்டு, நான்கு கைகள் வரையப்பட்ட படத்தை கண்டு அதை ஒவ்வொன்றாக அழுத்தவே கதவு திறக்க இளவரசியை சொந்தமாக்கிக் கொண்டானாம்
25) சவப்பெட்டி
26) விரல்கள்
27) 1. மகிழ்ச்சி - சோகம், நற்பணி
   2. ஈதல் , நல்மனை (மனைவி, குழந்தைகள்)
   3. வதந்தீ, மனம், கற்பனை

# சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- ம.அஜந்தா
தரம் :- 10
பாடசாலை :- யா/வேம்படி மகளிர் கல்லூரி

பெயர் :- க.தர்மினி
தரம் :- 12
பாடசாலை:- யா/உடுவில் மகளிர் கல்லூரி

பெயர் :- சி.டிலக்ஷன்
தரம் :- 10
பாடசாலை:- யா/சத்தியசாயி பாடசாலை

## விண்ணப்பதாரரின் விபரம்

முழுப்பெயர் :- ------------------------------
பாடசாலை :- ------------------------------
கல்வி கற்கும் தரம் :- ------------------------------
வீட்டு முகவரி :- ------------------------------
தொ.பேசி இலக்கம் :- ------------------------------

# உருத்திரபுரம் பாடசாலையின் அபிவிருத்தியில் சந்திரகுமார் எம்.பி.யின் பங்களிப்பு அதிகமானது

## பாடசாலை அதிபர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

உருத்திரபுரம் பாடசாலையின் தேவைகளை நாம் எடுத்துக் கூறிய போதெல்லாம் அதனை படிப்படியாக நிவர்த்தி செய்து வைத்ததில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் பங்களிப்பு அதிகமானது என பாடசாலையின் முதல்வர் திருமதி இதயசிவதாஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்ற உறுப்பினரின் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் தமிழ் இன்னிய அணிக்கான உபகரணங்களை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

நாடாளுமன்ற உறுப்பினரிடம் எங்களுடைய பாடசாலையின் தேவைகளை ஒவ்வொரு வருடமும் நாம் கோருகின்ற போது மனமுவந்து நிவர்த்தி செய்து வந்துள்ளார். 2011 ஆம் ஆண்டு பாடசாலைக்காக மின்சாரத்தை பெற்றுத் தந்தது முதல் பெரும் நெருக்கடிகளை மாணவர்களுக்கு ஏற்படுத்திய வகுப்பறை பற்றாக்குறை பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆரம்பத்தில் ஒரு வகுப்பறைக் கட்டடத்தொகுதியினை பெற்று தந்தது மட்டுமன்றி தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்றின் மூலம் தற்போது ஒரு வகுப்பறை க்கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு வருகிறது.

அதற்கும் 2010 ஆம் ஆண்டே வழியை ஏற்படுத்தியவர் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அதனடிப்படையிலேயே கடந்த வருட நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான தமிழ் இன்னிய அணிக்கான உபகரணங்களை வழங்கிவைத்துள்ளார். எனவே உருத்திரபுரம் பாடசாலை சமூகம் சார்பாக அவருக்கு எமது நன்றிகளை தெரிவித்து கொள்வதோடு கடந்த காலங்களில் எங்கள் பாடசாலையின் தேவைகளை பூர்த்தி செய்தது போன்று எதிர் காலத்திலும் தொடர்ந்தும் செயற் பட வேண்டும் என பாடசாலை முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் எம்.பி. உரையாற்றினார்.

# வேம்படிச்சந்தியில் பார்த்தீனியச்செடி

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் வேம்படி சந்திக்கருகில் வீதி ஓரத்தில் பார்த்தீனியச் செடிகள் வளர்ந்து காணப்படுவதாக பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியின் வீதிஓரத்தில் இவை பெரிய செடிகளாக வளர்ந்து பூர்த்துக் காணப்படுகின்றது. இச்செடிகளால் பாரிய ஆபத்துகாத்திருப்பதாக தெரிவிக்கும் இதேவேளை சன நடமாட்டம் கூடிய இந்தப்பகுதியில் உள்ள பார்த்தீனியச் செடிகளை அகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எனப் பலதரப்பினராலும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (85)

# வலயக்கல்வி பணிமனையின் அலுவலகம் திறந்து வைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு துணுக்காய் வலயக்கல்வி பணிமனையின் அலுவலகம் வடமாகாண கல்வி அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி மாலினி வெலின்ரன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இந்நிகழ்வு இடம் பெற்றது 2 மாடியைக் கொண்ட வலயக்கல்வி அலுவலகமும் பொதுக்கூட்ட மண்டபமும் கட்டப்பட்டுள்ளது. இதனைக்கட்டுவதற்கு 150 இலட்சம் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

இதற்கு வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா பிரதம விருந்தினராக கலந்துகொண்டு திறந்து வைத்துள்ளார்.

இதில் பிரதமஅதிதிகளாக வட மாகாண சபை உறுப்பினர்களான உ.ரவிகரன், சி.சிவமோகன்,ம.அன்ரனி ஜெகநாதன், திருமதி மேரி கமல குணசீலன் முல்லைத்தீவு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன், துணுக்காய் பிரதேச செயலாளர் தே.குணபாலன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (40)

# பிடியாணை நபர் கைது

(கரணவாய்)

தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் சென்றமை தொடர்பான வழக்கில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட துன்னாலையைச் சேர்ந்த நபர் ஒருவர் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரை பொலிஸார் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியவேளை வழக்கை விசாரணை செய்த நீதிபதி மா.கணேசராசா குறித்த இளைஞருக்கு 1000 ரூபா பணத்தை செலுத்துமாறு உத்தரவிட்டார். (18)



அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் ஒழுங்குபடுத்தலில் முறையற்ற வெளிநாட்டு பயணத்தை தவிர்த்தல் பற்றிய பொதுமக்களுக்கான விழிப்புட்டல் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்றது (90)

# வாரம் ஒரு காரம்

## ஏற்றங்கள் இல்லாத மாற்றங்கள் எல்லாம் ஏமாற்றம் தானே?...

**பெரும்பான்மையோடு பேரம் பேசிய தமிழர் அரசியல் பரப்பில் இது வரை பல மாற்றங்கள் வந்தது. ஆனால் எதிலும் ஏற்றமில்லை. ஏற்றங்கள் இல்லாத மற்றங்களை மட்டும் தான் மக்களும் விரும்புகின்றார்கள் போலும்?.. ஏனெனில் ஏற்றம் இல்லாத மாற்றங்கள் எல்லாம் ஏமாற்றம் என்பதை இதுவரை அவர்களும் புரிந்து கொள்ளவில்லைத் தானே!.....**

காலத்திற்குக் காலம் பல அரசியல் மாற்றங்களை நாம் கண்டுவிட்டோம். இது ஒரு ஜனநாயக நாடு என்பதால் அந்த மாற்றங்களும் எம்மால் தான் பெரும்பாலும் உருவாக்கப்பட்டன. இருப்பினும் எது நடந்தது?..... எதை எந்த அரசுகளால் நிறைவேற்ற முடிந்தது. எதை நாம் விரும்பிய அரசியல் வாதிகளால் பெற்றுத்தர முடிந்தது?... அரசியல் ரீதியான 'மாற்றம்' என்கின்ற ஒன்றைத் தவிர எந்தத் தீர்வினைத் தமிழினம் இதுவரை அடைந்தது?....

- விடுதலைப் போராட்டம் என்கின்ற பெயரில் கூட்டமைப்பு கூடியிருந்து அன்று அப்பாவிப் பிஞ்சுகளை அழித்தது. அந்த எதிர்ப்பால் அழிவுகளைத் தவிர ஏதாவது மிஞ்சியதா?...
- பின்பு யாழப்பாணத்திற்கு ரணில் வரும் போது சேர்ந்து நின்று சிங்கக்கொடியைத் தூக்கினார் எங்கள் சம்பந்தரையா இந்த இணக்க நடிப்பால் ஏதாவது நடந்ததா?.....
- தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அன்று தேர்தலிற்கு முன் 'தேசிய நிறைவேற்று அதிகார சபை மூலம் பலவற்றை சாதிக்க முடியும்' என்றார்கள். இதுவரை அந்தச் சபை மூலம் எதையாவது சாதித்தார்களா?
- மைத்திரியை ஆதரியுங்கள் விடிவு விரைவில் வருமென்றார்கள். நிறைவேற்று அதிகாரமும் நிறைவு பெறப்போகின்றது. நினைத்தது ஏதாவது நடந்ததா?...
- போர்க்குற்றம்... போர்க்குற்றம்.. என்று ஐ.நா. வின் அனுதாபத்தைப் பெற்றோம் அதிலென்றாலும் நினைத்தது அரங்கேறியதா?...

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மக்களை ஏமாற்றுகின்றது. சுயலாப அரசியலை சுத்திகரிக்க சுயநிர்ணய உரிமையைப் பேசிப்பேசியே விற்றுப்பிழைக்கின்றது என்பவற்றிற்கு அப்பால், அனைவரும் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பையே பிரதான தமிழ்த் தலைமையாக தெரிவு செய்யும் வரை சிங்கள மக்களோ அல்லது அது சார்ந்த அரசியல்வாதிகளோ நமக்கான தீர்வுக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். காரணம் சிங்கள மக்களிற்கு இவர்களின் பேச்சுக்கள் ஆழ் மனதில் அச்சத்தை ஊட்டுகின்ற விடயமாகும். ஆகவே தேர்தல் வெற்றிகளைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு குவித்தாலும் தமிழ்மக்களிற்கு அதனால் எந்தப் பயனும் இல்லை.

**ஒரு சில கேள்விகள்:**

- டக்ளஸ் தேவானந்தாவால் இணக்க அரசியலில் இருந்து சாதிக்க முடிந்ததை தற்போது கூட்டமைப்பு இணக்க அரசியலில் இருந்து ஏன் சாதிக்க முடியாமல் உள்ளது?...
- சுத்திச் சுத்தி இலங்கைத் தமிழரது அரசியல் நிலைப்பாடு டக்ளஸ் தேவானந்தாவின் கொல்லைக்குள்தான் வந்து நிற்கின்றது. இருப்பினும். கூட்டமைப்பின் இணக்க நடிப்பை ஏற்றுக் கொள்ளும் எம்மவரில் பலர் ஏன் டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் நியாயத்தை ஏற்றுக் கொள்ளவில்லை?.....

டக்ளஸ் தேவானந்தவா?.... சம்பந்தரா என்பது இங்கு முக்கியமல்ல. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினூடாக கோரப்படும் தமிழ் மக்களின் தீர்வுக்கோரிக்கையை (என்ன தீர்வு அது?) ஏற்க சிங்களத்தரப்பு சம்மதிக்காது என்பது தான் இங்கு வாதம்.

இது தற்போதய அரசியல் நகர்வுகள் மூலம் அனைவரிற்கும் நன்றாகப் புரிந்திருக்க வேண்டும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இணக்க அரசியல் வழியில் சென்றும் தீர்வைப் பெறமுடியவில்லையே!... இது தெளிவாகப் புரிந்தமையால்தான் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கூட டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் பயணத்திற்கு தீ வைப்பதில் குறியாக உள்ளது..

சிங்கள அரசு தமிழர்கான தீர்வைக் கொடுக்க முனைந்தாலும் அதைக் கூட்டமைப்பின் கையில் கொடுக்க நிச்சயம் பின்னிற்பர். அதே வேளை தமிழ் மக்களின் பெரும்பான்மைப் பிரதிநிதிகளிடம் தான் தீர்வைக் கொடுக்க வேண்டிய ஜனநாயகத் தேவையும் உள்ளது. ஆகவே மக்களின் தெரிவுகளில் மாற்றங்கள் வரும் வரை ஏமாற்றங்கள் தான்.

**வெண்கட்டியன**

# யானைகளின் சாகசம் மீண்டும் ஆரம்பம்



(கொழும்பு)

தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த, யானைகள் சாகச நிகழ்ச்சிகள் நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதல் கட்டமாக வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் யானைகளின் சாகச நிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளதாக, தேசிய மிருகக் காட்சிச்சாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுர டி சில்வா தெரிவித்துள்ளார்..

மிருகக் காட்சிச்சாலையில் இருந்த யானைகளுக்கு காச் நோய் தொற்றியுள்ளதாக ஏற்பட்ட சந்தேகத்தினால், கடந்த வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து யானைகள் சாகச நிகழ்ச்சிகளை நிறுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

மிருகக்காட்சிச் சாலையிலிருந்த 8 யானைகளுக்கு காசநோய் தொற்றியிருக்கலாம் என பரிசோதனையின்போது சந்தேகம் நிலவியது.

இதனையடுத்து யானைகளுக்கு சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், டிசம்பர் மாதத்தில் குறிப்பிட்ட 8 யானைகளும் இரண்டு தடவைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

பரிசோதனை முடிவுகளின் பிரகாரம் யானைகளின் உடலில் காசநோய்க் காரணிகள் இல்லையென்பது உறுதிசெய்யப்பட்டுள்ளதாக, மிருகக்காட்சிச் சாலைகள் திணைக்களம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# சட்டரீதியற்ற செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த நடவடிக்கை

## முல்லை அரச அதிபர் அறிவிப்பு

(முல்லைத்தீவு)

சட்டரீதியற்ற முறையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் நாகலிங்கம் வேதநாயகம் தெரிவித்தார்.

சட்டரீதியற்ற முறையில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் யாவும் எம்மால் நிறுத்தப்படும். அதில் எந்தவித பிரச்சினைகளும் இல்லை. கையூட்டல் பெற்றவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்தால் நடவடிக்கை எடுக்கப்படும். முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டு, 2012ஆம் ஆண்டு செம்ரெம்பர் மாதம் முடிவுக்கு வந்தது.

இறுதியாக மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளிலே புதுக்குடியிருப்பு ஓர் முக்கியமான பிரதேசமாகும். பல திட்டங்கள் ஊடாக ஒதுக்கப்பட்ட நிதிகள் இறுதியாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளுக்கு ஒதுக்கமுடியாமல் போனது கவலைக்குரிய விடயம்.



2012ஆம் ஆண்டு இந்த வைத்தியசாலை பகுதி விரைவாக கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு சொந்த இடத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. புதுக்குடியிருப்பு வைத்தியசாலையை எதிர்காலத்தில் தரமுயர்த்தும் நோக்கில் வேறு இடத்தில் காணி வழங்கப்பட்டுள்ளது.

எமது மாவட்டம் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள போதும் பல்வேறு தேவைகள் இன்னமும் நிறைவு செய்யப்படவேண்டியுள்ளது. குறிப்பாக கல்வி, சுகாதார வசதிகள் எமது மக்களுடைய வாழ்வாதார உதவிகள் உள்ளிட்ட செயற்பாடுகளில் தேவைகள் பல உள்ளன.

அவற்றை தொடர்ந்து செய்யக்கூடிய ஓர் வசதியான சூழல் உள்ளது. முன்னேற்றகரமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் எதிர்பார்க்கின்றேன். மத்திய, மாகாண அரசுகள் இணைந்து செயற்படும் போது, முழுமையான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்றார்.

# நிலத்தடிநீர் மாசு தொடர்பாக யாழ்ப்பாணம் தழுவிய விழிப்புணர்வு

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமையம்

வலிகாமம் நிலத்தடி நீர் மாசடைந்தமை தொடர்பாகவும் நீரை பாதுகாப்பது தொடர்பாகவும் உலக நீர் தினமான எதிர் வரும் 22ஆம் திகதி யாழ்ப்பாணம் தழுவிய ரீதியில் பாரியளவிலான விழிப்புணர்வு நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமையம் தீர்மானித்துள்ளது.

இயற்கை மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமையத்தின் செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் உடுவில் வேதாரணியம் வளவில் உள்ள அமையத்தின் அலுவலகத்தில் அதன் தலைவியும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதில் அமையத்தின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

எதிர்வரும் 22ஆம் திகதி சர்வதேச நீர் தினத்தன்று யாழ். மாவட்டம் தழுவிய ரீதியில் நீர் தொடர்பான விழிப்பு ணர்வை பாரியளவில் முன்னெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. வலிகாமத்தின் நிலத்தடி நீர் மாசடைந்தமை தொடர்பாகவும் இனிவரும் காலங்களில் நீர் மாசடைவதைத் தடுப்பது தொடர்பாகவும் இதன் போது பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

பெரும் சிரமத்துக்கு மத்தியில் மக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு மக்களுக்கு விழிப்புணர்வு செய்வது, கால்நடைகள் உட்பட வளர்ப்பு பிராணிகளுக்கு கழிவு எண்ணெயின் செறிவு குறைந்த தண்ணீரை கொடுப்பது எவ்வாறு என்று விவசாயிகளுடன் இணைந்து மக்களுக்கு அறிவூட்டல் போன்ற அத்தியாவசிய செயற்பாடுகளை முன்னெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கழிவு ஓயில் காரணமாக பாதிக்கப்பட்ட இடங்களின் விபரங்களை முழுமையாக சேகரித்து அதன் புவியியல் வரைபடத்தை மத்திய, மாகாண அரசுகளின் கவனத்திற்கு சமர்ப்பிப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

# தேசிய ஔடத கொள்கை தெளிவுபடுத்தல் கருத்தரங்கு



(கொழும்பு)

தேசிய ஔடத கொள்கை தொடர்பாக தெளிவுபடுத்தல் கருத்தரங்கொன்று நேற்று அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் தேசிய ஔடத கொள்கையை செயற்படுத்துவதனூடாக மக்களுக்கு கிடைக்கும் நன்மைகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

அரசாங்க தகவல் திணைக்களம் தகவல் தொடர்பாடல் மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சும் இணைந்து இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தன.

# நாடளாவிய ரீதியில் வயல்காணிகள் ஆய்வு

வயல் காணிகள் தொடர்பில் நாடளாவிய ரீதியில் ஆய்வொன்றை நடாத்துவதற்கு கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வயல் காணிகளின் தற்போதைய நிலை தொடர்பாகவும், அவை கையாளப்படும் விதம் குறித்தும் ஆராயப்படவுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சுனில் வீரசிங்க குறிப்பிடுகின்றார்.



விவசாய உற்பத்திகள் மற்றும் கலநல சேவை உதவியாளர்கள் ஊடாக உரிய தரவுகளை திரட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

# கடற்படை தலைமையகத்திற்கு யோசித ராஜபக்ஷ மாற்றம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் பாதுகாப்புப் பிரிவிலிருந்து அவரது புதல்வர் யோசித ராஜபக்ஸ இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.



சில வாரங்களுக்கு முன்னதாக யோசிதவை, அவரது தந்தையும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஸவின் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டிருந்தது. முன்னதாக யோசித ராஜபக்ஷ கடற்படையிலிருந்து விலகுவதற்கு முயற்சித்தார்.

எனினும், அந்த முயற்சி தோல்வியடைந்ததனைத் தொடர்ந்து தந்தையின் பாதுகாப்புப் பிரிவிற்கு மாற்றுமாறு கோரியிருந்தார். அந்தக் கோரிக்கைக்கு அமைய அண்மையில் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவில் யோசித இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார்.

எனினும், நாளை மறுதினம் முதல் யோசித்த கடற்படைத் தலைமையகத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளார். யோசித ராஜபக்ஸ கடற்படையில் லெப்டினனாக கடமை யாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாரேஹன்பிட்டியில் இலகுரக விமானம் மீட்கப்பட்டமை, ரகர் வீரர் வசீம் தாஜுடீன் மரணம் மற்றும் குறுகிய காலத்தில் பதவி உயர்வு மற்றும் புலமைப் பரிசில்களை கடற்படையில் பெற்றுக் கொண்டமை குறித்து யோசிதவிற்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் குறித்து விசாரணைகள் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தொழிலாளர், விவசாயிகள் வாழ்வுரிமை கட்சி வவுனியாவில் அங்குரார்ப்பணம்

(வவுனியா)

ஐந்து கோரிக்கைகளை முன்னிறுத்தி வடக்கில் புதிய கட்சியொன்று நேற்று முன்தினம் உருப்பெற்றுள்ளது. ந.தேவகிருஸ்ணனை செயலாளர் நாயகமாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ள "தொழிலாளர், விவசாயிகள் வாழ்வுரிமைக் கட்சி" வவுனியாவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இது தொடர்பில் அக்கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிராமப்புற மக்களுக்கு அடிப்படைக் கல்வி உரிமை, போக்குவரத்து உரிமை, சுகாதார உரிமை, வளப் பங்கீட்டு உரிமை என முற்றாக மறுக்கப்பட்டே வருகிறது. கிராமப்புற சமூக கட்டமைப்புக்கள் சிதைவுக்கு உள்ளாகியுள்ளன. முதலாளித்துவ நிதி நிறுவனங்களின் கடுமையான சுரண்டல்களுக்கு ஆளாகி நிர்கதியான நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டு ஒரு நவீன கொத்தடிமைத்தனத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

எனவே இந்த அடிமைத் தனத்தை உடைத்தெறிந்து மக்களின் வாழ்வுரிமையை மீட்பதற்கு

உணவு பொருளாதார தன்னாதிக்கத்தை ஏற்படுத்தல், விதைகளுக்கான ஏகபோக உரிமையை விவசாயிக்கே உரித்தாகச் செய்தல், மக்களின் வாழ்வாதாரத்திற்கான காட்டு வளத்தை பாதுகாத்தல், தண்ணீரை விற்பனை பண்டமாக்காமல் தடுத்து நிறுத்தல், நில ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்தல்.

என்ற விடயங்களை முன்நிறுத்தி மக்களை விழிப்புறச் செய்து மக்கள் பேரியக்கத்தை உருவாக்கும் நோக்கில் தொழிலாளர், விவசாயிகள் வாழ்வுரிமைக் கட்சியை நாம் ஆரம்பித்துள்ளோம்.

கடந்த காலங்களில் மக்கள் பிரச்சினைகளை முன்வைத்து நாம் செயற்பட்டது போன்று ஒன்றிணைந்து கட்சி ரீதியாக வீரியமான செயற்பாடுகளை முன்னெடுத்து தொழிலாளர், விவசாயிகளின் வாழ்வுரிமையை உறுதி செய்ய தொடர்ந்து போராடுவோம் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(37) இந்த நான்கு ஆண்டுகளிலும் 100இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..............................................................................................

(38) 2001ஆம் ஆண்டை விட கூடுதலாக எத்தனை மாணவர்கள் 2004ஆம் ஆண்டில் 100இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றனர்?

..............................................................................................

(39) இந்நான்கு ஆண்டுகளிலும் 100இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை அதிகமாக கொண்ட ஆண்டு எது?

..............................................................................................

(40) 2003ஆம் ஆண்டை விட குறைவாக எத்தனை மாணவர்கள் 2002ஆம் ஆண்டில் 100இற்கு குறைவான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்?

..............................................................................................

(41) 100இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களில் 2004ஆம் ஆண்டின் ஒவ்வொரு மாணவருக்கும் 3 பரிசுப் பொதிகள் வீதம் வழங்கப்பட்டது எனின், அவ்வாண்டு மாணவர்களுக்கு எத்தனை பரிசுப்பொதிகள் வழங்கப்பட்டிருக்கும்?

..............................................................................................

(42) நான்கு ஆண்டுகளும் 100இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற ஆண்டுகளை இறங்குவரிசைப்படுத்துக

..............................................................................................

08. விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்யப்படும் கடையொன்றில் குறிப்பிட்டதொரு தினத்தில் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் பற்றிய விபரம் தரப்பட்டுள்ளது

| பொருள் | ஒன்றின் விலை | விற்கப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| விளையாட்டு விமானம் | ரூபா 60 | 12 |
| அசையும் விமானம் | ரூபா 145 | 03 |
| சிறிய பொம்மை | ரூபா 36 | 15 |
| விளையாட்டுக் கார் | ரூபா 75 | 21 |
| ஊதி | ரூபா 25 | 10 |

(43) குறிப்பிட்ட தினத்தில் விற்கப்பட்ட விளையாட்டுப் பொருட்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..............................

(44) அன்றைய தினம் அசையும் விமானம் விற்பனையால் கிடைத்த பணம் எவ்வளவு?

..............................

(45) அப்பணம் ஊதி விற்பனையால் கிடைத்த பணத்தை விட எவ்வளவால் அதிகமானது? ..................

(46) எந்தப்பொருள் விற்பனையால் குறைந்தளவு பணம் கிடைத்தது? ..................

(47) ஒவ்வொரு விளையாட்டுப் பொருளிலும் ஒவ்வொன்றை வாங்கச் செலவாகும் மொத்தப் பணம் எவ்வளவு?

..............................................................................................

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01).1. கிழிந்த ஆடையானாலும் தோய்த்துதுலர்ந்து ஆடையைக்கட்டு 2. ஒற்றுமையுடன் செயற்பட்டால் நன்மை விளையும் (02).3. முயற்சி 4. கணனியில் 5. இளநீர்

(03).6. Netball 7. head mouth (04).8. கவனமாக இரு 9.கைகளை உயர்த்தவும் 10. உங்களுக்கு நன்றி (05).11. உங்கள் சுகம் எப்படி? 12. நான் நல்ல சுகமாக உள்ளேன்

(06).13.4 14.2 15.3 16.4 17.2 18.3 19.2
20.1 21.4 22.1 23.3 24.1 25.4 26.2
27.3 28.1 29.பொருத்தமானதை இணைத்தல் 30.3 31.1
32.2 33.கினிக்கோழி 34.வல்லூறு 35.பெண்குயின் 26.மரங்கொத்தி
37.14நாட்களுக்கு 38.மு.ப.7.30 39.ரூ.135.00 40.102பால்ரின்கள் 41.10.8kg
42.250.00 43.1.95 2.120 3.45 4.பேருந்து 44.9cm

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்

# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

01. குறிப்பிட்ட ஆரம்பப் பாடசாலை ஒன்றில் தரம் 1 முதல் 5 வரை உள்ள வகுப்புக்களில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையையும் ஒரு திங்கட்கிழமை பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கையும் கீழே உள்ள வரைபு காட்டுகிறது.




(01) குறிப்பிட்ட திங்கட்கிழமையன்று பாடசாலைக்கு வருகை தராத மாணவர்களின் எண்ணிக்கையை கீழே உள்ள அட்டவணையில் பூரணப்படுத்துக

| வகுப்பு | பாடசாலைக்கு வருகை தராத மாணவர்கள் |
|---|---|
| தரம் - 1 | .............................. |
| தரம் - 2 | .............................. |
| தரம் - 3 | .............................. |
| தரம் - 4 | .............................. |
| தரம் - 5 | .............................. |

(02) குறிப்பிட்ட பாடசாலையில் கற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..............................

(03) சமதொகையான மாணவர்கள் கற்கும் வகுப்புக்கள் இரண்டும் எவை?

..............................................................................................

(04) வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களும் வருகை தந்த தரம் எது?

..............................................................................................

(05) பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிக்கென தரம் 4 மாணவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் ரூபா 15 வீதமும் தரம் 5 மாணவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் ரூபா 20 வீதமும் பணம் அறவிடப்பட்டது. எனின் இரு வகுப்புக்களிலும் இருந்து அறவிடப்பட்ட மொத்தப்பணம் எவ்வளவு?

..............................................................................................

(06) தரம் 1, தரம் 2, தரம் 3 ஆகிய வகுப்புக்களில் உள்ள மாணவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் சம தொகையான பணம் அறவிடப்பட்டது. இம் மூன்று வகுப்புக்களிலும் இருந்து கிடைக்கப்பெற்ற மொத்தப் பணம் 1200ரூபா எனின், ஒரு பிள்ளையிடமிருந்து பெறப்பட்ட பணம் எவ்வளவு?

..............................................................................................

02. பின்வரும் விபரங்களுக்கு ஏற்ப வரையப்பட்டுள்ள வரைபை பரிசீலித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குவிடை தருக

தரம் 5இல் கல்வி கற்கும் சாந்தி, ரமணி ஆகிய இரண்டு பிள்ளைகள் குறிப்பிட்ட 5 பாடங்களிலும் பெற்றுக் கொண்ட புள்ளிகள் பற்றிய விபரத்தை கீழே உள்ள வரைபு காட்டுகிறது.




(07) சாந்தியை விட ரமணி அதிக புள்ளிகளைப் பெற்ற பாடங்கள் எவை? ..............

(08) இருவரும் சமமான புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட பாடம் எது? ..............

(09) ரமணி தான் பெற்ற புள்ளிகளில் மிகக்குறைவான புள்ளிகளை எந்தப் பாடத்தில் பெற்றார்?
..........

(10) சாந்தி 5 பாடங்களிலும் பெற்ற மொத்தப் புள்ளிகள் எத்தனை?
..........

(11) 5 பாடங்களிலும் யார் கூடுதலான மொத்தப் புள்ளிகளைப் பெற்றவர்?
..........

(12) ஒவ்வொரு பாடத்திலும் 80இற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறெனின், சாந்தியும் ரமணியும் பரிசு பெறக்கூடிய பாடங்களை அவர்களின் பெயர்களுக்கு முன்னால் எழுதுக

சாந்தி - ..........

ரமணி - ..........

(13) பரிசுப் பொருட்கள் ஒவ்வொன்றிலும் ரூபா 16.25 பெறுமதியான 15 அப்பியாசக் கொப்பிகள் வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டதெனின், ஒரு பரிசுப் பொதிக்கு செலவாகும் பணம் எவ்வளவு?
..........

(14) அவ்வாறான இரண்டு பரிசுப் பொதிகளைக் கடையில் வாங்குவதற்கு ரூபா 500 கொடுக்கப்பட்டால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?
..........

03. பின்வரும் வினாக்களுக்கான விடையை கோட்டில் எழுதுக

(15) சீனியைப் பொதி செய்து விற்கும் ஒரு வியாபாரி ஒவ்வொன்றும் 50kg நிறையுடைய மூன்று சீனிச் சாக்குகளை வாங்கி, ஒன்று 3kg நிறையுடைய பொதிகளில் அடைத்தான். எனின், அவன் செய்த சீனிப் பொதிகள் எத்தனை?
..........

(16) ஒரு கேக்கிலிருந்து $\frac{3}{8}$ பங்கை கமலும் $\frac{1}{4}$ பங்கை நிமலும் பங்கிட்டுக் கொண்டனர். எஞ்சிய கேக், முழுவதின் என்ன பின்னமாகும்? ..........

(17) ஒரு மேசையின் நீளம் 2m 40cm உம் அகலம் 1m 35cm உம் ஆகும். மேசையின் சுற்றளவு யாது?
..........

(18) வாகனம் ஒன்று மொத்தமாக 3 மணித்தியாலம் 20 நிமிடம் பிரயாணம் செய்து பி.ப.1.15இற்கு குறிப்பிட்ட இடத்தை அடைந்தது. எனின், வாகனம் பயணித்த நேரம் யாது?
..........

(19) 10403 என்னும் எண்ணைச் சொற்களில் எழுதுக? ..........

(20) 3, 6, 9, 4 ஆகிய இலக்கங்களைப் பயன்படுத்தி ஆயிரத்தினிடத்தில் 6 வரக்கூடிய இரண்டு எண்களை எழுதுக?
..........

04. உருவை அவதானித்து 21 - 23 ஆகிய வினாக்களுக்கு விடை தருக




(21) அருகில் உள்ள உருவின் சுற்றளவு யாது?
..........

(22) படத்தில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு யாது?
..........

(23)



இவ்வுருவிலிருந்து இனங்காணக்கூடிய முக்கோணங்கள் எத்தனை?
..........



05. மொத்த வியாபார நிறுவனமொன்றில் நாளொன்றில் விற்கப்பட்ட சில பொருட்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பொருள் | கிலோ கிராம் |
|---|---|
| சிவப்பு அரிசி | 5280 |
| சீனி | 1500 |
| வெள்ளை அரிசி | 4520 |
| பச்சை அரிசி | 3750 |
| பருப்பு | 1565 |

(24) விற்கப்பட்ட அரிசியின் மொத்த அளவு யாது?
..........

(25) 1kg சீனி விற்கப்படுவதால் பெறப்படும் இலாபம் ரூபா 4எனின், அன்றைய தினம் சீனி விற்பனையினால் பெறப்பட்ட இலாபம் எவ்வளவு?
..........

(26) 105 வாழைப்பழங்கள் 5 பிள்ளைகளுக்கிடையே சமனாகப் பகிரப்பட்டன. அந்தப்பிள்ளைகளில் 4 பேருக்கு கிடைத்த வாழைப்பழங்களின் எண்ணிக்கை யாது?
..........

(27) இனிப்பு உருண்டை ஒன்றின் விலை 3 ரூபா 50சதம் எனின், 30 இனிப்பு உருண்டைகளின் விலை யாது?
..........

(28) ரூபா 9.00 இற்கு சவர்க்காரக் கட்டியொன்றும், 33.00 ரூபாவுக்கு 1கிலோகிராம் மாவும், ரூபா 27.50 சதத்திற்கு பருப்பும் வாங்கி ரூபா 100 தாளை முதலாளியிடம் கொடுத்த போது முதலாளி மேலும் 50 சதத்தை கேட்டு வாங்கினால் மீதியாக உமக்கு கிடைக்கும் பணம் எவ்வளவு?
..........

06. பின்வரும் உருவிலுள்ள ஒவ்வொரு சிறிய சதுரத்தின் ஒரு பக்க நீளம் 1cm ஆகும். இங்கு நிழற்றப்பட்டுள்ள பகுதியினை கொண்டு விடையளிக்க



(29) பரப்பளவு யாது? ..........

(30) சுற்றளவு யாது? ..........

(31) பின்வரும் எண் நிரையில் அடுத்து வரும் எண்ணை எழுதுக

| | | | |
|---|---|---|---|
| 0.2 | 0.5 | 0.8 | ? |

..........

(32) 612 சவர்க்கார கட்டிகள் சம எண்ணிக்கை உள்ள நான்கு பெட்டிகளில் அடுக்கப்பட்டன. இரு பெட்டிகளில் உள்ள சவர்க்காரக் கட்டிகளின் எண்ணிக்கை யாது?
..........

(33) ஒரு போத்தலில் நிரப்பப்படத்தக்க இனிப்புப் பானத்தின் கனவளவு 375ml ஆகும். அத்தகைய ஏழு போத்தல்களில் நிரப்பப்படத்தக்க இனிப்புப் பானத்தின் கனவளவை l, ml ஆகியவற்றில் தருக?
..........

(34) அப்பா வீட்டில் இருந்து மு.ப.8.15இற்கு புறப்பட்டு நகரத்திற்குச் சென்று பின்னர் பி.ப.1.30இற்கு வீடு திரும்புகிறார். அப்பா வெளியே செலவிட்ட நேரம் யாது?
..........

(35) பாத்திரம் ஒன்று 5லீற்றர் 500மில்லிலீற்றர் பாலைக் கொள்ளும் அவ்வாறான 5 பாத்திரங்களில் உள்ள பாலை 55 சிறு போத்தல்களுக்கு சம அளவாக இட்டால் ஒரு போத்தல் கொள்ளும் பாலின் அளவு யாது?
..........

(36) கபிலன் தொலைக்காட்சிப் பெட்டியொன்றை ரூபா 30,000இற்கு வாங்கி இரண்டு வருடங்களுக்குப் பின் அதன் விலையின் 1 / 3 பங்கினைக் குறைத்து விற்கின்றான். எனின், விற்ற விலை யாது?
..........

07. ஒரு ஆரம்பப் பாடசாலையில் நான்கு ஆண்டுகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் 100இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் காணப்படுகிறது

| ஆண்டுகள் | 100இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2001 | 25 |
| 2002 | 35 |
| 2003 | 40 |
| 2004 | 55 |

# ஆசிரிய ஆலோசகர் சேவை உள்ளீர்ப்பு கல்வி இராஜாங்க அமைச்சருடன் ஆராய்வு

(வலிகாமம்)

வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கம், ஆசிரிய ஆலோசகர்களின் புதிய சேவை உள்ளீர்ப்புத் தொடர்பில் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணனுடன் சந்திப்பொன்றை நடாத்தியுள்ளதாக சங்கப் பொதுச் செயலாளர் ஸ்ரீந்திரன் அறிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பும் கலந்துரையாடலும் கடந்த 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கோப்பாய் கல்வியியற் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது. மகளிர் விவகாரப் பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் இச்சந்திப்பு இடம்பெற்றிருநதது.

சங்கத்தின் சார்பில் தலைவர் தி.சிவரூபன், பொதுச் செயலாளர் உட்பட ஐந்து உறுப்பினர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தனர்.

இக்கலந்துரையாடலின் போது மூன்று முக்கியமான விடயங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. உயர்நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் ஆசிரிய ஆலோசகர் சேவை உள்ளீர்ப்பினை துரிதப்படுத்தி உதவுமாறும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மோட்டார் சைக்கிள், வெளிக்கள உத்தியோகத்தர்களில் ஒருவராகிய ஆசிரிய ஆலோசகர்களிற்கும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் ஆசிரிய ஆலோசகர்களிற்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டிருப்பது தொடர்பில் அமைசசரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தும் குறிப்பிடத்தக்கது. ஆசிரிய ஆலோசகர் தொடர்பான மேற்படி இரு விடயங்களையும் ஆர்வத் தோடும் அக்கறையோடும் கேட்டுக் கொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் இவை தொடர்பில் தாம் ஏற்கனவே அறிந்திருப்பதாகவும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகவும் விரைவில் ஆசிரிய ஆலோசகர்களை புதிய சேவையில் உள்ளீர்ப்புச் செய்ய கல்வி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

அத்துடன் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களின் குடிநீர்ப்பிரச்சினை தொடர்பிலும் சங்கம் அமைச்சருடன் கலந்துரையாடியிருந்தது. குடிநீரில் கழிவு ஓயில் கலந்திருப்பது இப்பிரதேச மாணவர்களை நீண்ட காலத்திற்கு பாதிப்புக்குள்ளாக்கும் எனவும் நரம்பு சம்பந்மான வியாதிகள் மூளைக் குறைபாடுடைய பிள்ளைகள் பிறப்பதற்கும் வேறு பல நோய்கள் ஏற்படுவதற்கும் இப் பிரதேச நீர் காரணமாகவுள்ளதென மருத்துவ அறிக்கை கள் தெரிவிப்பது தொடர்பில் இவ் உறுப்பினர் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

வலிகாமம் பிரதேச குடிநீர் பிரச்சினை தொடர்பில் போதிய தகவல்கள் கிடைக்கப்பெற்றதும் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்கு கொண்டு வந்து நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (06)

## சிறுகதைத் தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது

கொடகே வெளியீடாக வெளிவந்துள்ள ப. ஆப்டீனின் 'கொங்காணி' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா அண்மையில் பம்பலப்பிட்டி சாகரா வீதி இலக்கம் 14 இல் அமைந்துள்ள A.G.S கலையரங்கத்தில் பேராசிரியர் சபா ஜெயராஜா தலைமையில் நடைபெற்றது..

இவ்விழாவில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், மற்றும் ராஜ்பிரசாத் துரைவிஸ்வநாதன் டீ.நயீம் கீடீன்(Zonal Business Manager.Airtel) ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.

வரவேற்புரை கே.பொன்னுத்துரை நிகழ்த்தினார்., வெளியீட்டுரையை அன்ரனி ஜீவா நிகழ்த்தினார். கருத் துரைகளை திக்குவல்லை கமால், செல்வி ஜீவா சதாசிவம், பதுளை சேனாதிராஜா ஆகியோர் வழங்கினர். ஏற்புரையை நூலாசிரியர் ப.ஆப்டீன் நிகழ்த்த , நிகழ்ச்சியினை மேமன்கவி தொகுத்தளித்தார். (90)

## பாடுகளின் பாதைதனில்...



மற்றவர்களை நீங்கள் மனமார மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்கமாட்டார் என்று இயேசு கூறிய வார்த்தைகள் இன்று எமக்கு நினைவுக்கு வருகின்றது மன்னியுங்கள்! மன்னிப்புப் பெறுவீர்கள. மன்னிப்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. ஆனால் மன்னித்த

## மன்னியுங்கள் மன்னிப்புப் பெறுவீர்கள்

வர்கள் மகான்களாக மாறி இருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, இயே சுவை சிலுவைநரலதாபயில் அறைந் தார்கள். பிதாவே! தாங்கள் செய் வதென்ன வென்று அறியாத இவர்களை மன்னியும் என்றார் இயேசு.

ஒருவரை எத்தனை முறை மன்னிக்க முழயும்? நானும் மன்னித்துக் கொண்டே இருக்கின்றேன். அவர் தொடர்ந்து எனக்குத் தீமை செய்து கொண்டே இருக்கின்றார் என்று பல நேரங்களில் நாம் கூறுகின்றோம். மன்னிப்பதற்கு அளவே இல்லை என்பதை இயேசு, ஏழுமுறை மட்டுமல்ல, எழுபது தடவை் ஏழு முறை மன்னிக்க வேண்டுமென்று கூறுகிறார். அன்பின் உச்சக்கட்டமே மன்னிப்பு. எனவே இப்போதே நாம் மன்னிக்க முழயாத தருணங்களை ஆண்டவரின் முன்னிலையில் நினைவில் கொண்டு வருவோம். நாமும் மனதார அவர்களை மன்னித்து ஆசி கூறுவோம்! இது எல்லோருக்கும் எளிதான காரியம் அல்ல. ஆனால் தொடர்ந்து இறைவனிடம் ஜெபிக்கும்போது இறைவன் நம் மனக்காயங்களையும் வெறுப்புக்களையும் மாற்றி, இறையருளைப் பொழிந்து, மன்னிக்கும் மனப்பான்மையை நமக்குத் தந்தருள்வார். நம் அன்பு இயேசு எப்போதும் நம்மை மன்னிக்கத் தயாராக உள்ளார். நாமும் நமது அயலார்களை மன்னிப்போமா?

–சிவனுகா–

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................

பிறந்த ஆண்டு :- ........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்





காரைநகர் வலந்தலை மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் இரதோற்சவம் முதன்முறையாக அண்மையில் வெகுசிறப்பாக இடம்பெற்றது. (50)

## முரசின் இன்றைய பலன்

(07.03.2015 சனிக்கிழமை)

ஜய வருஷம் மாசி மாதம் 23 ஆம் திகதி.
துதியைத்திதி- மரணயோகம் -(திருவள்ளுவர் குருபூசை)
உத்தரம் - நட்சத்திரம் பி.ப-02.22 வரை. பின் அர்த்தம்
இராகு காலம்-9.25-10.55 வரை சுபநேரம் 03.25 -04.55 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**: அஷ்டமத்துச் சனி இருப்பதினால் பாதுகாப்பில் சிரத்தை எடுத்தல்

**ரிஷபம்**: சகோதரருடன் ஏற்பட்டிருந்த மனத்தாங்கல் நீக்கம்

**மிதுனம்**: தேங்கியதை விற்பனை செய்ய புதிய யுக்தியைக் கையாளல்

**கடகம்**: வெளியூர் பயணம் காலை வாரிவிட்டதால் கவலை ஏற்படல்

**சிம்மம்**: எதிர்பாராது சுபநிகழ்வு ஏற்படல்

**கன்னி**: குரு 11 இல் இருப்பதினால் மேலும் ஒரு கிளை நிறுவனம் ஆரம்பிக்க முயலுதல்

**துலாம்**: பாதுகாப்பற்ற கடவையைக் கடக்கையில் மயிரிழையில் தப்பிவிடல்

**விருச்சிகம்**: ஏழரைச் சனி நடப்பதினால் பயணத்தை ஒத்திவைத்தல்

**தனுசு**: வெளியீடுகளில் ஆர்வம் காட்டுதல்

**மகரம்**: கலைஞர்கள் விளையாடுத் துறையினர் கௌரவிக்கப்படல்

**கும்பம்**: அவசரக் குடுக்கையினால் பொருளைத் தவறவிடல்

**மீனம்**: சனி குரு கோசரம் நன்மையாக இருப்பதினால் பங்கை முறித்து தனித்தியங்க எண்ணமிடல்

# பாகிஸ்தானின் அணு ஆயுதம் எச்சரிக்கை விடுக்கிறது பிரிட்டன்



(வொஷிங்டன்)

பாகிஸ்தானில் உள்ள அணு ஆயுதங்கள் குறித்து உலக நாடுகள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என பிரிட்டனின் முன்னாள் பாதுகாப்புத்துறை செயலர் லியம்பாக்ஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறியதாவது, பாகிஸ்தானில் தற்போது 120 இற்கும் மேற்பட்ட அணு ஆயுதங்கள் உள்ளன.

மேலும் ஆண்டு ஒன்றிற்கு சுமார் 24 அணு ஆயுதங்கள் தயாரிக்கும் திறன் கொண்ட உலைகள் செயற்பட தொடங்கியுள்ளன. ஆனால் தற்போது ஈரான் நாட்டு அணு ஆற்றல் திட்டம் மட்டுமே பேசி வருகிறோம்.

உலகில் உள்ள அனைத்து நாடுகளும் தங்களின் எதிரி நாடுகளிடம் கூட அரசியல் ரீதியாகவே தொடர்பு கொண்டுள்ளன. ஆனால் பாகிஸ்தானை பொறுத்தவரையில் நிர்வாகத்திற்கு பொறுப்புானவர்கள் அரசியல் வாதிகளா, இராணுவமா, உளவுத துறையா என்பது தெரியாமல் அனைவரிடமும் தொடர்பு கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது. அர்சியல் ஸ்திரத்தன்மை இல்லாத பாகிஸ்தானில் அணு ஆயுதங்கள் தீவிரவாதிகள் கைகளில் போய்விடும் என்ற அச்சம் காணப்படுகிறது இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## அமெரிக்காவில் விமான விபத்து, ஹோலிவுட் நடிகர் படுகாயம்



(கலிபோர்னியா)

அமெரிக்காவை சேர்ந்த பிரபல ஹோலிவுட் நடிகரான ஹாரிசன் போர்டு செலுத்திச் சென்ற விமானம் விபத்துக்குள்ளானதில் அவர் படுகாயமடைந்தார்.

போர்டு சென்ற சிறிய ரக விமானம் கலிபோர்னியாவின் வெனிஸ அருகே விபத்தில் சிக்கியது. இதில் தலையில் பலத்த காயமடைந்த அவர், உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அபாய கட்டத்தை தாண்டி தற்போது உடல்நிலை தேறி வருகிறார். தற்போது 72 வயதாகும் போர்டு, 55 வருட அனுபவம் உடையவராவார்.

இதே போல் கடந்த 1999 ஆம் ஆண்டு போர்டு செலுத்திச் சென்ற ஹெலிகொப்டர், சாண்டா கிளாரிட்டா அருகே விபத்துக்குள்ளானது. அதிலும் அவர் லேசான காயத்துடன் உயிர் தப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

## எண்ணெய்க்கிணறுகளுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். தீ வைப்பு



ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் ஈராக்கின் டிக்ரிட் நகரத்தில் உள்ள எண்ணெய் கிணறுகளுக்கு தீ மூட்டியுள்ளனர்.

கூட்டுப்படைகள் மேற்கொள்ளும் வான் தாக்குதல்களை தடுக்கும் முகமாகவே இவ்வாறு எண்ணெய் கிணறுகளுக்கு தீ மூட்டியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக கடும் கரும்புகை மேலெழுந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் கடந்த ஆண்டு ஜூன் மாதம் இந்த எண்ணெய் கிணறுகளை கைப்பற்றியிருந்தனர்.

இந்த எண்ணெய் கிணறுகளில் இருந்து நாளொன்றுக்கு 25 ஆயிரம் பரல் எண்ணெய் பெறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பேச்சுரிமைக்கு எதிராக செயற்படுகிறது இந்தியா
### இயக்குநர் லெஸ்லி உட்வின் தெரிவிப்பு



பி.பி.சி செய்தி நிறுவனத்தின் "இந்தியாவின் மகள்" ஆவணப் படத்துக்கு தடை விதித்துள்ளதன் மூலம் பேச்சுரிமைக்கு எதிராக இந்தியா செயற்படுவதாக அப்படத்தின் இயக்குநர் லெஸ்லி உட்வின் கூறியுள்ளார்.

லெஸ்லி உட்வின் இயக்கத்தில் உருவான "இந்தியாவின் மகள்" ('Storyville India's Daughter') ஆவணப்படம், சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை உலகம் முழுவதும் ஒளிபரப்பப்படுவதாக இருந்தது. ஆனால், இந்திய அரசு ஆவணப்படத்தை தடை செய்ய எடுத்த முயற்சிகளையடுத்து குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாகவே நேற்று முன்தினம் இரவே பிரிட்டனில் ஒளிபரப்பப்பட்டது.

"இந்தியாவின் மகள்" ஆவணப்படத்தை மத்திய உள்துறை அமைச்சகம் கடுமையாக எதிர்த்துள்ளதோடு, சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியுள்ளபோதும் லெஸ்லி அஞ்சவில்லை.

தன் ஆவணப்படத்தை தகுந்த பரிசீலனையில்லாமல் தடைசெய்துள்ள விவகாரத்தில் பிரதமர் நரேந்திர மோடி தலையிட்டு தீர்வு காண வேண்டும் எனவும் லெஸ்லி கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ் ஆவணப்படத்திற்கு இப்போது விதிக்கப்பட்டுள்ள தடையானது, இந்திய பேச்சுரிமைக்கு எதிராக செயற்படுவதையே காட்டுகிறது" என்றார்.

## மாலைதீவு பயணத்தை இரத்துச் செய்தார் மோடி

மாலைதீவில் நிலவும் உள்நாட்டுச் சர்ச்சைகளுக்கு இடையே, மோடி அங்கு செல்வதை அரசு விரும்பவில்லை என டில்லி நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிககின்றன.

பிரதமர் நரேந்திர மோடி தனது 4 நாடுகள் பயணத்திட்டத்தில் இருந்து மாலைதீவை தவிர்த்துள்ளார். மாலைதீவு முன்னாள் அதிபர் முகமது நசீது கைது செய்யப்பட்டது உள்ளிட்ட அந்நாட்டில் நிலவும் சர்ச்சைகள் காரணமாகவே அவர் மாலைதீவு பயணத்தை இரத்துச் செய்துள்ளதாகத் தெரிகிறது.

பிரதமர் மோடி அடுத்த வாரம தனது பயணத்தை ஆரம்பிக்கிறார். இலங்கை, மொரீஷியஸ், செசல்ஸ் உள்ளிட்ட தீவு நாடுகளுக்கு அவர் செல்கிறார்.

மாலைதீவு முன்னாள் அதிபர் முகமது நிஷித் கைது செய்யப்பட்டபோது, அவரிடம் பொலிஸார "முரட்டுத்தனம்" காட்டியதை பதிவு செய்த வீடியோ வெளியானதால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

இந்தக் கைது நடவடிக்கை பெரும் சர்ச்சையைக் கிளப்பிய நிலையில், மாலைதீவில் தற்போது உள்ள அரசியல் சூழல் கவலை அளிப்பதாக உள்ளது. இத்தகைய் சூழலில் மாலைதீவு பயணத்தை பிரதமர் நரேந்திர மோடி இரத்துச் செய்துள்ளார்.

## 35 இலட்சம் பெண்கள் பங்கேற்ற பொங்கல் விழா



(திருவனந்தபுரம்)

இந்தியாவின் திருவனந்தபுரம் ஆற்றுக்கால் பகவதியம்மன் கோவில் பொங்கல் விழா நேற்று முன்தினம் நடந்தது. பிரபல நடிகைகள் உடபட சுமார 35 இலட்சம் பெண்கள் பொங்கலிட்டு அம்மனை வழிபட்டனர். பிரசித்தி பெற்ற திருவனந்தபுரம் ஆற்றுக்கால் பகவதி அம்மன் கோவிலில் பொங்கல் திருவிழா கடந்த பெப்ரவரி 25ஆம் திகதி அம்மனை காப்பு கட்டி குடியிருத்தும் சடங்குடன் தொடங்கியது. இவ்விழா வின் 9ஆம் நாளான நேற்று முன்தினம் பிரசித்தி பெற்ற பொங்கல் விழா நடைபெற்றது.

விழாவில் பிரபல நடிகை சரிதா, மலையாள நடிகைகள் கல்பனா, அபர்ணா, சிப்பி உட்பட ஏராளமானோர் பொங்கலிட்டு வழிபட்டனர். சுமார் 35 இலட்சத்திற்கும் அதிகமான பெண்கள் பொங்கல் இட்டதாக கோவில் நிர்வாகிகள் தெரிவித்தனர். விழாவையொட்டி திருவனந்தபுரத்தில் 600 பெண் பொலிஸார் உட்பட 4000 இற்கும் மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். மேலும் ரயில்வே மற்றும் கேரள அரசு சார்பில் கூடுதல் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

## பாலியல் குற்றவாளிக்கு மக்கள் வழங்கிய தண்டனை



இந்தியாவின், நாகலாந்து மாநிலத்தில் சிறையில் அடைக்கப்பட்ட பாலியல் குற்றவாளியொருவரை பொதுமக்கள் சிறையை உடைத்து, வெளியே இழுத்து வந்து அடித்துக் கொலை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பங்களாதேஷில் இருந்து சட்டவிரோதமாக இந்தியாவிற்கு குடிபெயர்ந்த 35 வயதான சயீட் பரீட்கான் என்பவரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இவர் நாகலாந்தில் கார் விற்பனை செய்யும் தொழில் செய்து வந்துள்ளார். குறித்த நபர் கடந்த 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நாகா பழங்குடியின பெண் ஒருவரை பல்வேறு பகுதிகளுக்கு கடத்தி சென்று பாலியல் பலாத்காரம் செய்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்துள்ளதுடன் பின்னர் அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு, திம்மாபூரில் உள்ள மிகவும் பாதுகாப்பு மிக்க மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# உண்ணாவிரதத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு மறுப்பு

## குற்றஞ்சாட்டுகிறார் அனந்தி

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோரினால் மேற்கொள்ளப்படும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு பொலிஸ் பாதுகாப்பிற்கு கோரிக்கை விடுக்கப்பட்டும் பாதுகாப்பு தரவில்லை என வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் நேற்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ். நல்லூர் ஆலய முன்றலில் நேற்று காணாமற்போனோரின் உறவினர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

எதிர்வரும் மகளிர் தினம் வரையும் சுழற்சி முறையில் நடைபெறவுள்ள இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் இரவு வேளையில் உண்ணாவிரதத்தினை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரி யாழ். பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு தொலைநகல் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் கோரிக்கையினை பொலிஸ் அத்தியட்சகர் ஏற்றுக்கொண்டு இதுவரையில் பொலிஸ பாதுகாப்பினை வழங்கவில்லை.

எனவே, இரவு உண்ணாவிரதப் போராட்டத்தினை நடாத்துவதற்கு பாதுகாப்பு இல்லாத காரணத்தினால், மாலை 5.00 மணியுடன் நிறைவுறுத்தி காலை உண்ணாவிரதப் போராட்டத்தினை மீண்டும் நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன், வடமாகாண சபை உறுப்பினராக இருக்கும் தமக்கு இருந்த பொலிஸ் பாதுகாப்பினை எடுத்துவிட்டார்கள். ஆனால், மக்களின் ஜனநாயக போராட்டத்திற்கு பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்திருந்தும், அந்தக் கோரிக்கையினை பரிசீலணை செய்து பாதுகாப்பு வழங்காதது கவலை அளிப்பதாகவும் வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் மேலும் கூறினார். (25)

# ஐ.நா. அறிக்கை ஒத்திவைத்தாலும் பாதிப்பு இல்லை



வடக்கில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் தொடர்பான ஐ.நா.வின் விசாரணை அறிக்கை செப்ரெம்பர் வரை பிற்போடப்படுவதால் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என இலங்கைக்கான நோர்வேயின் உயர்ஸ்தானிகர் கிற்டா லோஷன் நம்பிக்கை தெரிவித்துள்ளதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நோர்வே தூதுவருடனான சந்திப்பு நேற்று யாழ்ப்பாணத்தில் முதலமைச்சர் இல்லத்தில் இடம்பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் மாற்றம் இருப்பதாகவும் ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோர் தம்முடன் இணைந்து செயற்படுவதாகவும் அரசில் பல நன்மையான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்ததோடு, தற்போது மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை தாமதப்படுத்தப்பட்டு மறைக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் இருக்கின்றது.

இதனால்தான் எதிர்ப்புக்களை தெரிவிக்கின்றோம். இது தொடர்பில் நாட்டில் இரு தரப்பினரும் வெவ்வேறான அபிப்பிராயங்களை வெளியிடுகின்றனர். இதற்கான ஒழுங்குமுறையை அரசு மேற்கொள்ளாமை கவலையளிக்கின்றது எனத் தெரிவித்ததோடு, ஐ.நா.வின் அறிக்கை ஒருமுறை தான் தாமதமாகலாம். செப்ரெம்பரில் நிச்சயமாக வெளியிடப்படும். இதில் எந்தவிதமான மாற்றுக்கருத்தும் இல்லை.

தமிழ் மக்கள் மீது நாம் அக்கறை கொண்டுள்ளோம். இதில் தவறு ஏற்பட இடமளியோம். தற்போது அரசியல் உங்களுக்கு சாதகமாக இருக்கின்றபோது ஏன் இன அழிப்பு தொடர்பில் மாகாண சபையில் பிரேரணையை கொண்டு வந்தீர்கள் என அவர் வினவினார்.

இது தமிழ் மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் ஒரு ஆவணம். இதில் தவறு இருந்தால் குறிப்பிடலாம்.

இது ஆராய்ந்து எடுக்கப்பட்ட அறிக்கை. அத்துடன் இது பாதகமான ஒரு ஆவணம் இல்லை. இந்த உண்மையை அனைவரும் ஏற்றுக்கொண்டால்தான் நாட்டில் மக்களிடையே நல்லெண்ணத்தை ஏற்படுத்தமுடியும் எனவும் தெரிவித்ததாகவும், அதைத்தான் சர்வதேசமும் எதிர்பார்ப்பதாக தூதுவர் தெரிவித்ததாகவும் முதலமைச்சர் தெரிவித்தார். (இ,25)

## உயர்தரப்...

ஆம் திகதி முதல் நேற்று வரையில் விண்ணப்பிக்க முடியும் என முன்னர் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்திருந்தது.

எனினும் தற்போது விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது. இதன்படி உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை மற்றும் தனியார் பரீட்சார்த்திகள் உரிய முறையில் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

## இந்திய...

அறிவிப்புகள் வெளியாகும் என தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இரு நாடுகளும் கூட்டு முயற்சியில் ஈடுபடுவதற்கு டயர் உற்பத்தி, மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி போன்ற உற்பத்திகள் பொருத்தமானவை என அர்ஜுன மகேந்திரன் கூறியுள்ளார்.

கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பதைவிட, எதிர்காலத்தில் நிலையான மற்றும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, இலங்கையின் மிகப் பெரிய வர்த்தக பங்காளியாக இருப்பதோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் 2014 ஆண்டில் 4.6 பில்லியன் டொலர்களாக இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இரகசிய...

தெரிவித்துள்ளார். இதேவேளை, புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள் மீண்டும் இலங்கைக்கு வருகைதரும் போது அவர்களை விமான நிலை யத்திலேயே கைது செய்வதாகவும், விசாரணைக்கு உட்படுத்துவ தாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நிலையானது பாதுகாப் பான தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்களிடையே அவநம்பிக் கையையும், அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலமாக இதுவரை கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் விசாரணைக்குட்படுத்தப்படுபவர்கள் தொடர்பான விபரங்களையும் தெரிந்து கொள்ள தமிழ் மக்கள் ஆவலாக உள்ளனர். எனவே தமிழ் மக்கள் சார்பில் எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வின் போது இவ்விரண்டு கேள்விகளையும் பிரதமரிடம் முன்வைக்கவுள்ளதாக ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

## கோத்தாவிடம்...

இது குறித்து தாக்கல் செய்திருந்த வழக்கின் விசாரணை நேற்று கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## எமது...

பொதுமக்கள் தமது உறவுகளை மீட்டுத்தருமாறு கோரினர்.

மேலும் இலங்கையின் புதிய அரசின் 100 நாள் வேலைத்திட்டத்திற்கும் தமது காணாமற்போன உறவுகள் தொடர்பில் விபரங்களை வழங்கவேண்டுமெனவும், இல்லையேல் தாம் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்வோம் என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (77,29)

## கர்ப்பிணிப்...

மந்திகை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று மாலை அவர் உயிரிழந்த நிலையில் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (18)

## இரு நாட்கள்...

மோடி வரும் 13 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை இலங்கைக்கான அரசுமுறைப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

வரும் 13 ஆம் திகதி கொழும்பு வரும் இந்தியப் பிரதமருக்கு, அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்படும்.

அன்றைய தினமே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடத்தும் இந்தியப் பிரதமருக்கு, பிரதமர் ரணில் விக்ரமசிங்க மதியபோசனம் வழங்கி கௌரவிக்கவுள்ளார்.

வரும் 13 ஆம் திகதி மாலை, நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வில் இந்தியப் பிரதமர் உரையாற்றுவார்.

இந்திய அமைதிப்படையினர் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்குச் சென்று மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தும் நரேந்திர மோடி, மகாபோதிக்கும் பயணம் செய்வார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சார்பில் இராப்போசன அரச விருந்து மோடிக்கு அளிக்கப்படும்.

இந்தியப் பிரதமர் அநுராதபுரம், யாழ்ப்பாணம், தலைமன்னார் ஆகிய இடங்களுக்கும் செல்வார்.

யாழ்ப்பாணத்தில் அவர் இந்திய உதவியுடன் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள, கலாசார நிலையத்துக்கான நினைவுக்கல்லைத் திரை நீக்கம் செய்து வைப்பார்.

அத்துடன் இந்திய உதவியுடன் கட்டப்பட்ட வீடுகளையும் பயனாளிகளுக்கு கையளிப்பார்.

தலைமன்னார் செல்லும் இந்தியப் பிரதமர் மோடி, இந்திய உதவியுடன் அமைக்கப்பட்ட, மதவாச்சி தொடக்கம் தலைமன்னார் வரையிலான தொடருந்துப் பாதையில், தொடருந்துப் பயணத்தை ஆரம்பித்து வைப்பார்.

## சீனாவின்...

இந்த நிலைமை குறித்து இலங்கை அரசாங்கம் சீனாவுக்கு தகவல் அளித்துள்ளது.

திட்டம் தற்காலிகமாகவே இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், அது இரத்துச் செய்யப்படவில்லை என்றும் இலங்கை கூறியுள்ளது.

அத்துடன், இதுதொடர்பான தொடர் நடவடிக்கைகள் குறித்த தகவல்களை சீனாவுடன் பரிமாறிக் கொள்வதாகவும், கலந்துரையாடுவதாகவும் வாக்குறுதி கொடுத்துள்ளது.

ஏனைய நாடுகளுடன் தொடர்புடைய திட்டங்களையும் ஸ்ரீலங்கா தரப்பு விசாரணை செய்வது தொடர்பாக நாம் கவனித்து வருகிறோம்.

இது எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பது குறித்து நாம் நெருக்கமாக கண்காணிப்போம்.

இந்தப் பிரச்சினையை இலங்கை பொருத்தமான முறையில் தீர்க்கும் என்றும், சீன நிறுவனங்களின் உரிமைகளையும், நியாயமான நலன்களையும் பாதுகாக்கும் என்றும் நம்புகிறோம்.

அதேவேளை, இலங்கையின் தேசிய அபிவிருத்தியின் அடிப்படை நலன்களைப் பாதுகாக்க இலங்கையில் சீன நிறுவனங்களின் முதலீடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## இனவாதம்...

ரங்கா கலன்சூரிய, பிரதமரின் இந்தக் கருத்து சுதந்திர ஊடகவியலுக்குச் சவால் விடுப்பது போல் அமைந்திருந்தாலும், அதில சில உண்மைகளும் இருக்கவே செய்கின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

முன்னைய ஆட்சியில் ஊடக சுதந்திரம் இல்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டு வந்த நிலையில், புதிய ஆட்சியின் மூலம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஊடகங்களுக்குச் சாதகமான சூழ்நிலையைச் சரிவரப் பயன்படுத்த சில சிங்கள, தமிழ் பத்திரிகைகள் தவறிவிட்டன என்று சுட்டிக்காட்டியிருக்கும் ரங்கா கலன்சூரிய, புதிய சூழலைப் பயன்படுத்தி நடுநிலையான தொழில்முறைத் தேர்ச்சி மிக்க ஊடகச் செயற்பாடுகளை மேற்கொள்ள இந்தப் பத்திரிகைகள் முயற்சிக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கையின் சிங்கள, தமிழ் பத்திரிகைகள் இருவேறு துருவங்களாக தத்தமது வாசகர்களுக்கிடையே பிரிவினையை அதிகரிக்கும் விதமான ஊடக அறிக்கையிடலையே நீண்டகாலமாகச் செய்து வருகின்றன. வாசகர்கள் என்ன அறிந்துகொள்ளவேண்டும் என்பதைவிடவும், அவர்கள் விரும்புபவற்றை அவர்களுக்கு வழங்கி வியாபார ரீதியாக இலாபமீட்டிக்கொள்வதையே இந்தப் பத்திரிகைகள் பிரதான வியாபார தந்திரோபாயமாக காலம் காலமாகக் கடைப்பிடித்து வருகின்றன என்று விமர்சித்திருக்கும் ரங்கா கலன்சூரிய,

ஊடக விழுமியங்களையும், தொழில்முறை தர்மங்களையும் மீறிய இத்தகைய பத்திரிகை அறிக்கையிடல்களே இந்த நாட்டில் வாழும் சிங்கள, தமிழ் சமூகங்களிடையே பிரிவினையை அதிகரித்து வந்தன என்றும் தெரிவித்துள்ளார்.

சிங்கள, தமிழ் மொழி பத்திரிகையாளர்களிடம் காணப்படும் தொழில்முறைத் தேர்ச்சியற்ற தன்மையும் இந்த நிலைமைக்கு பிரதான காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஊடகவியலுக்குப் பதிலாக ஏதாவது ஒரு செயற்பாட்டை முன்னெடுக்கும் செயற்பாட்டுவாதம் பத்திரிகைகளில் முதன்மைப்படுத்தப்படுவதாகவும், தொழில்முறைத் தேர்ச்சி இருக்கவேண்டிய இடத்தில் தேசப்பற்று என்ற பெயரிலான விடயங்கள் முதன்மைப் படுத்தப்படுவதாகவும் ரங்கா கலன்சூரியா தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஊடகங்களின் உரிமையாளர்கள் பிரதான சவாலாக இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கும் அவர், அரசியல் நிகழ்ச்சிநிரல்களின் அடிப்படையில் செயற்படும் இத்தகைய ஊடக உரிமையாளர்கள் குறித்து இன்று உலகளவில் அதிகம் பேசப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இத்தகைய ஒரு ஆபத்தான ஊடகச் சூழலை மாற்றியமைப்பதற்கு ஊடகத் தொழில்துறை ஒன்று சேர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் கலாநிதி ரங்கா கலன்சூரிய தனது கட்டுரையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

## அனந்தியின் உண்ணாநோன்பு நல்லூரில் நேற்று



(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற காணாமற்போனோரின் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொள்ளாது நல்லூரில் தனியே ஒரு சில காணாமற்போன உறவுகள் அனந்தி சசிதரன் தலைமையில் சுழற்சி முறையிலான தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

கிளிநொச்சியில் நேற்றுக் காணாமற்போனோரின் உறவுகள் அமைப்பின் ஏற்பாட்டில் உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்றதாக ஏற்கனவே அறிவித்திருந்தபோதிலும் நேற்று அனந்தி சசிதரன் தலைமையில் சில காணாமற்போனோரின் உறவுகள் உண்ணாநோன்பை மேற்கொண்டனர். (இ)

## மகிந்தவை பிரதமராக்க கோரி கண்டியில் திரண்டனர் மக்கள்



(கண்டி)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கக் கோரி விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, தினேஷ் குணவர்தன மற்றும் வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் கண்டியில் நேற்று நடைபெற்றது.

நேற்று பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமான கூட்டத்தில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டதாக தகவல்கள் தெரிவிகின்றன.

இதேவேளை கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றவர்கள் மீது கல்வீச்சுத் தாக்குதலும் இடம்பெற்றுள்ளது.

மேலும், இக்கூட்டத்தில் ஐ.ம.சு கூட்டணியின் மாகாண சபை உறுப்பினர்கள் 87 பேர் கலந்து கொண்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம, முன்னாள் ஆளுனர் டிகிரி கொப்பேகடுவ மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் மாற்றம் வேண்டும் அதுவே இன்றைய தேவை

### சம்பிக்க சொல்கிறார்

(கொழும்பு)

100 நாட்கள் மிக முக்கியமானது அல்ல, அந்த நாட்களுக்குள் மேற்கொள்ளப்படுகின்ற மாற்றங்களே முக்கியம் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மிஹிந்தலை புனித பூமியில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு கூறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தை மக்கள் அதிகாரத்திற்கு நியமித்தது அரசியல் சீர்திருத்தங்களுக்காகவே என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் குறித்த அரசியல் சீர்திருத்தத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்கவும், நாடாளுமன்ற தேர்தல் முறையை மாற்றியமைக்கவும் விசேடமாக இலஞ்சம் மற்றும் ஊழல்களை ஒழிக்கும் ஆணைக்குழுவை அமைப்பதனை மக்கள் குறித்த 100 நாட்களில் எதிர்பார்க்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

### இது நல்லாட்சி அல்ல

#### சொல்கிறார் தயாசிறி ஜயசேகர

நாட்டில் இன்று நடைபெறுவது நல்லாட்சியல்ல, மாடுகளின் ஆட்சியே என வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். ஹெட்டிப்பொலவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். குருணாகல் மாவட்டத்தில் ஐ.தே.கட்சி தலைவர்கள் எவரும் கிடையாது. வடமேல் மாகாணத்தில் நாம் நிர்மாணித்த பாடசாலைகளை நாமே திறந்து வைப்போம். எமது பாடசாலைகளுக்கு எவராவது கை வைத்தால் பாடசாலை அதிபரை அல்லது கல்வி பணிப்பாளரை வீட்டுக்கு அனுப்புவோம். தற்போது அரசியல்வாதிகள் எந்தவொரு அபிவிருத்தி வேலையிலும் ஈடுபடவில்லையெனவும், மற்றவர்களின் குறைகளைத் தேடும் நடவடிக்கையிலேயே ஈடுபடுகின்றனரெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

### ஔடதசட்டம் நிறைவேறியது

தேசிய ஔடத ஒழுங்கு முறை அதிகார சபை சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த சட்டமூலம் தொடர்பான வாக்கெடுப்பு நேற்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. சட்டமூலத்துக்கு ஆதரவாக 68 வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளதுடன் அஜித் குமார எம்.பி மாத்திரம் எதிராக வாக்களித்துள்ளார்

## ஜனாதிபதியுடன் சுஸ்மா நேற்று முக்கிய பேச்சு



(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் நேற்று கொழும்பு வந்தடைந்துள்ளார்.

சுஸ்மா சுவராஜ், பிரதமர் ரணில் விக்ரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினார் என்று கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின், முன் ஏற்பாடுகளுக்காகவே வெளிவிவகார அமைச்சர் தற்போது கொழும்பு வந்துள்ளார். நேற்று இரவு ஜனாதிபதி மைத்திரியை அவரது விஜயராமமாவத்தையில் உள்ள இல்லத்தில் சுஸ்மா சந்தித்துப் பேசியுள்ளார்.

## வீதி நிர்மாணத்தில் குளறுபடி மெல்லக் கசிகிறது தகவல்

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் பெருந்தெருக்கள் நிர்மாணத்தில் பெரும் மோசடிகள் இடம்பெற்றிருப்பது இப்போது தெரிய வந்திருக்கிறது.

இந்த வீதிகள் நிர்மாணத்துக்கான ஒப்பந்தங்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமை பற்றிய தகவல் வெளியானதை அடுத்தே இந்த மோசடிகள் குறித்த தகவல்களும் அம்பலமாகி இருக்கின்றன.

நடைபெற்ற வீதி நிர்மாணங்கள் மீதான விசாரணையில் சுமார் 26பில்லியன் ரூபா மோசடி இடம்பெற்றிருப்பது தெரியவந்துள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்திருக்கிறார்.

இந்த முறைகேடு குறித்த உண்மையான சரியான தகவல்களை விரைவில் அம்பலப்படுத்தவிருப்பதாகவும் அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார். கடந்த அரசாங்கத்துடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்த மிகவும் வசதி படைத்த குடும்பமொன்று இந்த நிதி மோசடிகளுடன் நெருக்கமான தொடர்பை கொண்டிருந்ததும் இப்போது தெரிய வந்திருக்கிறது.

நடந்து முடிந்த வீதி நிர்மாணப்பணிகளில் தவறாக கையாளப்பட்ட நிதிகளின் விபரங்கள் இதில் தொடர்புபட்ட நபர்கள் மற்றும் நடைபெற்ற வேலைகள் குறித்த விபரங்கள் யாவும் தகுந்த ஆதாரங்களுடன் வெளியிடப்படுமெனவும் அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. அடுத்தவாரம் இடம்பெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் இந்த விபரங்கள் யாவற்றையும் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் மற்றொரு தகவலில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## நீதிமன்றை நாடினார் திஸ்ஸ உறுப்புரிமை நீக்கியதை எதிர்த்து

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளரும், முன்னாள் சுகாதார அமைச்சருமான திஸ்ஸ அத்தநாயக்க உச்ச நீதிமன்றில் மனுவொன்றினைத் தாக்கல் செய்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தனது அங்கத்துவம் நீக்கப்பட்டமை சட்டத்திற்கு விரோதமானது என தெரிவித்தே அவர் மனுவினைத் தாக்கல் செய்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலளார் திஸ்ஸ அத்தநாயக்க கடந்த ஜனாபதிபதித் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்கினார். இதற்கு பிரதிபலனாக அவருக்கு சுகாதார அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டது.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து எதிர்தரப்பிற்கு தாவிய திஸ்ஸ அத்தநாயக்க மீது, ஐக்கிய தேசியக் கட்சியினர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்ததுடன், அவருடைய அங்கத்துவத்தையும் இரத்து செய்தனர். இவ்வாறான ஒரு நிலையிலேயே ஐக்கிய தேசிக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கட்சிலிருந்து தனது அங்கத்துவம் நீக்கப்பட்டமைக்கு எதிராக மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புலிகளுக்கு ஆதரவளிப்பது பிரிட்டனில் குற்றச்செயலாகும்

### பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயம் தெரிவிப்பு

புலிகளுக்கு ஆதரவளிப்பது பிரித்தானியாவில் ஓர் குற்றச் செயலாகும் என இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. பிரித்தானியாவில் புலிகள் அமைப்பு ஓர் தடை செய்யப்பட்ட இயக்கமாகும்.

நிதி திரட்டுதல், கொடிகளை அசைத்தல் உள்ளிட்ட புலிகளுக்கு ஆதரவான எந்தவொரு செயற்பாடும் அந்நாட்டு குற்றவியல் சட்டத்தின் பிரகாரம் தண்டிக்கப்படக்கூடிய குற்றச் செயலாகும். யுத்தத்தின் பின்னர் இலங்கைக்கு பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும் அந்த அலுவலகத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மார்ச் 7ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.